
# திருக்கோயில்




ஏப்பிரல்
1999

விலை
ரூபாய் ஐந்து

அழகர் திருவிழா

மதுரை அருள்மிகு மீனாட்சி சோமசுந்தரேசுவரர் திருமணக் காட்சி



திருக்கோயில் வாசகர்களுக்கு எங்கள் இனிய தமிழ்ப் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

# திருக்கோயில்





திங்கள் இதழ்

தனி இதழ் : ரூ. 5.00

ஆண்டு உறுப்பினர் கட்டணம் : ரூ. 60.00

ஆயுள் உறுப்பினர் கட்டணம் : ரூ. 500.00

| மாலை | திருவள்ளுவர் ஆண்டு 2030 | பிரமாதி ஆண்டு சித்திரை | மணி |
|---|---|---|---|
| 41 | ஏப்பிரல் 1999 | | 4 |



**சிறப்பாசிரியர்**

*சுகவனேஸ்வர், இ.ஆ.ப.,*
*சிறப்பு ஆணையாளர் மற்றும் ஆணையாளர்*

**ஆசிரியர்**

*முனைவர் த. அமிர்தலிங்கம்,*
எம்.ஏ., பி.எச்.டி.,

**திருக்கோயில் நிர்வாகக் குழுவினர்**

**திரு எஸ். கனகய்யா,** பி.எஸ்.சி., பிஎல்.,
கூடுதல் ஆணையாளர்

**திரு த. சுந்தரம்,** பி.ஏ., பி.எல்.,
இணை ஆணையாளர், தலைமை இடம்

**திரு மு. இராமச்சந்திரன்,** பி.ஏ.,
ஆணையாளரின் நேர்முக உதவியாளர்

**திரு தி. ஜெயராமன்,** பி.ஏ.பி.எல்.,
இணை ஆணையாளர் - செயல் அலுவலர்
அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி
திருக்கோயில், பழநி.


<u>முகப்பு</u>

அழகர் எதிர் சேவை

## பொருளடக்கம்


*அருள்மிகு நடராசர் போற்றி*

*பங்குனி உத்திரம்*
- திருமதி மீனாட்சி கோகுலவாசன்

*திருவாலவாயான் அங்கயற்கண்ணி திருமணம்*
- அங்கயற்கண்ணி அடிமை

*திருவிழாக்களின் நோக்கமும் பயனும்*
- டாக்டர் பருத்தியூர் சந்தானராமன்

*சிவராத்திரி புராணம் கூறும் கதைகள்*
- நடராசன் அடிமை

*கம்பரின் இராமாவதாரம்*
- கம்பன் கவிநயமணி வே. தியாகராஜன்

*கம்பன் கண்ட பரதன்*
- முனைவர் இரா. செல்வகணபதி

*சுற்றுலாப் பொருட்காட்சியில் நமது அரங்கம்*
- எம். சம்பத்குமார், பி.இ.,

*நூல் மதிப்புரை*
- அ. அருள் செல்வி

*வினாவும் விடையும் - திருவிளக்கு வழிபாடு*
- டாக்டர் ஹேமா சந்தானராமன்



உறுப்பினர் கட்டணம் அனுப்ப வேண்டிய முகவரி :

**உயர்திரு ஆணையாளர் அவர்கள்**

திருக்கோயில்

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை

*119, உத்தமர் காந்தி சாலை, சென்னை - 600 034.*

தொலைபேசி : *8279407*

# அருள்மிகு நடராசர் போற்றி

### அருள் வேண்டுதல் (சங்கற்பம்)

நாளும் கோளும் நன்னிலை பொருந்திய
இந்நன்னாளில் ......................
அவர்களுக்கும், அவர்கள் குடும்பத்தார்க்கும்,
சுற்றத்தார்க்கும், சமூகத்தார்க்கும்,
உலகுயிர்கட்கும்,
அறம், பொருள், இன்பம், வீடு என்னும்
நாற்பயனும் பொருந்தி நன்னிலை பெருகவும்
நீண்ட வாழ்நாள் பெருகவும்,
திருவருள் பெருகவும்,
மங்கல வாழ்வெய்தவும்
உம் திருவடிகளில்
மலர் தூவி வழிபாடு செய்கின்றோம்.

### அருள்மிகு நடராசர் 8 போற்றிகள்

1. ஓம் அசபா நடத்தாய் போற்றி!
2. ஓம் இரத்தின சபாபதியே போற்றி!
3. ஓம் சித்திர சபாபதியே போற்றி!
4. ஓம் செந்தமிழ் மலர்சூடி போற்றி!
5. ஓம் தாமிர சபாபதியே போற்றி!
6. ஓம் தில்லை அம்பலவா போற்றி!
7. ஓம் பொன்னம் பலவா போற்றி!
8. ஓம் வெள்ளி அம்பலவாணா போற்றி! போற்றி!!

### அருள்மிகு நடராசர் 16 போற்றிகள்

1. ஓம் அசபா நடத்தாய் போற்றி!
2. ஓம் ஆதிரை நாளுகந்தாய் போற்றி!
3. ஓம் இரத்தின சபாபதியே போற்றி!
4. ஓம் ஐந்தொழில் நடத்தாய் போற்றி!
5. ஓம் குனித்த புருவத்தாய் போற்றி!
6. ஓம் கூற்றுதைத் தானே போற்றி!
7. ஓம் சித்திர சபாபதியே போற்றி!
8. ஓம் செந்தமிழ் மலர்சூடி போற்றி!
9. ஓம் ஞான மாநடத்தாய் போற்றி!
10. ஓம் தாமிர சபாபதியே போற்றி!
11. ஓம் தில்லை அம்பலவா போற்றி!
12. ஓம் தென்பால் உகந்தாடுவாய் போற்றி!
13. ஓம் பனித்த சடையாய் போற்றி!
14. ஓம் பொன்னம் பலவா போற்றி!
15. ஓம் மன்றில் ஆடும்மணியே போற்றி!
16. ஓம் வெள்ளி அம்பலவாணா போற்றி! போற்றி!!

### அருள்மிகு நடராசர் 108 போற்றிகள்

1. ஓம் அசபா நடத்தாய் போற்றி!
2. ஓம் அட்ட மூர்த்தியே போற்றி!
3. ஓம் அடல்விடைப் பாகா போற்றி!
4. ஓம் அண்டமுற ஆடுவாய் போற்றி!
5. ஓம் அந்தி பகல் ஆடுவாய் போற்றி!
6. ஓம் அம்பலத் தரசே போற்றி!
7. ஓம் அமரர்க் கரியாய் போற்றி!
8. ஓம் அற்புதக் கூத்தா போற்றி!
9. ஓம் அனலேந்தி ஆடுவாய் போற்றி!
10. ஓம் அனவரதக் கூத்தா போற்றி!
11. ஓம் ஆடல் வல்லானே போற்றி!
12. ஓம் ஆதிரை நாளுகந்தாய் போற்றி!
13. ஓம் ஆயிரந் தோளுடையாய் போற்றி!
14. ஓம் ஆறு சடைகரந்தாய் போற்றி!
15. ஓம் ஆனஞ்சு உகந்தாய் போற்றி!
16. ஓம் ஆனந்தக் கூத்தா போற்றி!
17. ஓம் இரத்தின சபாபதியே போற்றி!
18. ஓம் இளநிலாச் சென்னியாய் போற்றி!
19. ஓம் உமைகாண ஆடுவாய் போற்றி!
20. ஓம் உமைபாகம் கொண்டாய் போற்றி!
21. ஓம் உலகுக்கு ஒருவனே போற்றி!
22. ஓம் ஊழிக் கூத்தனே போற்றி!
23. ஓம் எடுத்தபொற் பாதத்தாய் போற்றி!
24. ஓம் எண்திசை மூர்த்தி போற்றி!
25. ஓம் எரிபுரை மேனியாய் போற்றி!
26. ஓம் எரியாடல் அமர்ந்தாய் போற்றி!
27. ஓம் ஐந்தொழில் நடத்தாய் போற்றி!
28. ஓம் ஒளிவளர் விளக்கே போற்றி!
29. ஓம் கங்கைத் தலைவா போற்றி!
30. ஓம் கட்டங்கம் ஏந்தியோய் போற்றி!
31. ஓம் கண்ணின் மணியே போற்றி!
32. ஓம் கண்மூன்று உடையாய் போற்றி!
33. ஓம் கபாலக் கையனே போற்றி!
34. ஓம் களிற்றுரி போர்த்தாய் போற்றி!
35. ஓம் கற்பகக் கொழுந்தே போற்றி!
36. ஓம் கனகக் குன்றே போற்றி!
37. ஓம் குனித்த புருவத்தாய் போற்றி!
38. ஓம் கூத்துகந்த தேனே போற்றி!
39. ஓம் கூற்றுதைத் தானே போற்றி!
40. ஓம் கொக்கிறகுச் சென்னியாய் போற்றி!
41. ஓம் கொடுகொட்டி ஆடுவாய் போற்றி!
42. ஓம் கொன்றை மாலையாய் போற்றி!

43. ஓம் சித்திரசபாபதியே போற்றி!
44. ஓம் சிதம்பரப் பொருளே போற்றி!
45. ஓம் சிலம்பொலி அடியாய் போற்றி!
46. ஓம் சிவகாமி மணாளா போற்றி!
47. ஓம் சிவானந்தக் கூத்தா போற்றி!
48. ஓம் சிற்றம்பல மேயாய் போற்றி!
49. ஓம் சுந்தரக் கூத்தா போற்றி!
50. ஓம் செந்தமிழ் மலர்சூடி போற்றி!
51. ஓம் சோதியுட் சோதீ போற்றி!
52. ஓம் ஞானசபாபதியே போற்றி!
53. ஓம் ஞான மாநடத்தாய் போற்றி!
54. ஓம் தாமிர சபாபதியே போற்றி!
55. ஓம் திசைக்கெல்லாம் வித்தே போற்றி!
56. ஓம் தில்லை அம்பலவா போற்றி!
57. ஓம் தீவினைகள் தீர்ப்பாய் போற்றி!
58. ஓம் துன்பம் துடைப்பாய் போற்றி!
59. ஓம் தூவண்ண நீற்றாய் போற்றி!
60. ஓம் தெய்வக் கூத்துகந்தாய் போற்றி!
61. ஓம் தெய்வச் சுடரே போற்றி!
62. ஓம் தெய்வ நடத்தரசே போற்றி!
63. ஓம் தென்பால் உகந்தாடுவாய் போற்றி!
64. ஓம் நடமாடும் நாயகா போற்றி!
65. ஓம் நடராச பதியே போற்றி!
66. ஓம் நள்ளிருள் நட்டமாடீ போற்றி!
67. ஓம் நன்ஞானக் கூத்தா பாற்றி!
68. ஓம் நாகம் அசைத்தாய் போற்றி!
69. ஓம் நாற்றிசை விளக்கே போற்றி!
70. ஓம் நீலமணி மிடற்றாய் போற்றி!
71. ஓம் நீறு மெய்பூசுவாய் போற்றி!
72. ஓம் நெற்றிக்கண் நெருப்பே போற்றி!
73. ஓம் படர்சடைப் பால்வண்ணனே போற்றி!
74. ஓம் பண்ணார் இன்தமிழே போற்றி!
75. ஓம் பண்ணின் இசையே போற்றி!
76. ஓம் பதஞ்சலிக்கு அருளியோய் போற்றி!
77. ஓம் பரம நாடகா போற்றி!
78. ஓம் பரமாய பரஞ்சுடரே போற்றி!
79. ஓம் பலிதேரும் இறைவா போற்றி!
80. ஓம் பல்லாழி படைத்தாய் போற்றி!
81. ஓம் பவள மேனியாய் போற்றி!
82. ஓம் பளிங்கு மணிக்குன்றே போற்றி!
83. ஓம் பனித்த சடையாய் போற்றி!
84. ஓம் பாடிளம் பூதத்தாய் போற்றி!
85. ஓம் பாரிடம் சூழ ஆடுவாய் போற்றி!
86. ஓம் பிறவாய் இறவாய் போற்றி!
87. ஓம் புரமெரிய நக்காய் போற்றி!
88. ஓம் புலிக்கால் முனிவர்க்கருளினோய் போற்றி!
89. ஓம் புலியுரி அதளினாய் போற்றி!
90. ஓம் புவன போகமே போற்றி!
91. ஓம் பூதம்பாட ஆடுவாய் போற்றி!
92. ஓம் பொதுவில் ஆடுவாய் போற்றி!
93. ஓம் பொன்னம் பலவா போற்றி!
94. ஓம் மண்துலங்க ஆடுவாய் போற்றி!
95. ஓம் மணிமன்ற வாணா போற்றி!
96. ஓம் மதயானை உரித்தோய் போற்றி!
97. ஓம் மதியணி சடையாய் போற்றி!
98. ஓம் மழுவேந்தீ போற்றி!
99. ஓம் மன்றில் ஆடும் மணியே போற்றி!
100. ஓம் மாணிக்க வண்ணனே போற்றி!
101. ஓம் மாநடஞ்செய் மறை யோய் போற்றி!
102. ஓம் மால்கடல் ஆனாய் போற்றி!
103. ஓம் மான்மறிக் கையாய் போற்றி!
104. ஓம் மூவிலை வேலேந்தீ போற்றி!
105. ஓம் யோக வெள்ளமே போற்றி!
106. ஓம் வானவர் பெருமான் போற்றி!
107. ஓம் வீடருள வல்லாய் போற்றி!
108. ஓம் வெள்ளி அம்பலவாணா போற்றி! போற்றி!

பாடல் : அருள்மிகு நடராசர்

உலகெலாம் உணர்ந் தோதற்கு அரியவன்
நிலவுலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்

வாழ்த்துடன் பிரசாதம் அளித்தல்

அருள்மிகு நடராசப் பெருமான் அருள்
முழுமையும் உங்களுக்குக் கிடைப்பதாகுக
உங்களின் எல்லா விருப்பமும்
நிறைவேறுக. மங்களம் உண்டாகுக.

★★★

# பங்குனி உத்திரம்

- திருமதி மீனாட்சி கோகுலவாசன்

பங்குனி மாதத்தில் பங்குனி உத்திரம் விசேஷமானதாகும்; பௌர்ணமியுடன் கூடிய நாளாகும்.

பங்குனி மாதத்தில் திருச்சியில் தாயுமான சுவாமி ஆலயத்தில் தேர்த்திருவிழாவும், தெப்பத் திருவிழாவும் நடைபெறுகிறது.

பழநியில் பங்குனி உத்திரம் மிகச்சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

ஸ்ரீரங்கத்தில் பங்குனி மாதத்தில் பிரம்மோற்சவம் நடைபெறுகிறது.

பங்குனிமாதம் திருப்பரங்குன்றத்தில் முருகப் பெருமானுக்கும் தெய்வயானைக்கும் திருக்கல்யாணம் நடைபெறுகிறது.

பண்ணாரியில் பங்குனியில் உத்திர நட்சத்திரத்தை ஒட்டி பெரும் திருவிழா நடைபெறுகிறது.

சென்னையில், மயிலாப்பூரில் இந்தமாதம் நடைபெறும் 'அறுபத்துமூவர் விழா', கபாலீஸ்வரர் சன்னிதியில் மிகச்சிறப்பாக கொண்டாடப்படுகிறது.

ஐயப்பன் இன்று தான் பிறந்ததாகச் சொல்லப்படுகிறது.

மொத்தத்தில் பௌர்ணமி பூஜை என்பது மிகவும் விசேஷமானதாகும். அதில் 'டோலோஸ்தவம்' செய்பவன் ஜீவன் முக்தனாகி, இம்மையில் இவ்வுலக சுகத்தை அனுபவித்து, உடல் வாழ்க்கையின் முடிவில், மறுமையில் பரமபதத்தை அடைவான் என்றும், அதை 'உத்திர பல்குனி' நட்சத்திரத்தில் செய்தால் (பங்குனி மாதம், பௌர்ணமி உத்திர நட்சத்திரம்) இருநூறு ஆண்டுகள் விஷ்ணு பதத்தில் வாழ்வான் என்றும் தேவிபாகவதம் கூறுகிறது.

இன்றைய தினம் விரதம் இருந்து, முருகனைப் பூஜித்து வணங்கினால், பிறவிப்பயனை அடையலாம் என்று புராணங்கள் கூறுகின்றன.

மேலும் இன்று கல்யாண விரதம் என்றும் புராணங்கள் கூறுகின்றன.

நாற்பத்தெட்டு ஆண்டுகள் பங்குனி உத்திர விரதம் இருப்பவர்களுக்கு, அடுத்த பிறவியானது அருள் நிறைந்த பிறவியாக அமையுமாம். அப்பிறவியில் உலகத்திலுள்ளவர்கள் வணங்கத்தக்க, தெய்வீகத் தன்மையை அடைவார்கள் என்று புராணம் கூறக் கேட்கலாம்.

உத்திர நட்சத்திரத்தின் அதிபதி சூரியன். பக்தி வேடமிடுபவர்களையும், விரதம் என்று போலித்தனம் செய்பவர்களையும், விரதத்திற்கு பங்கமேற்படுத்துபவர்களையும், பாவங்களைச் சுட்டுப்பொசுக்கும் சூரியன் அவர்களைச் சுட்டெரித்து விடுவான் என்று சூரிய புராணம் கூறுகிறது.

திங்களூரில் ஆண்டு தோறும் பங்குனி உத்திரத்தன்று காலை உதயாதி ஆறுமணிக்கு சூரிய ஒளி இறைவன் பாதத்தில் படுவதால் அன்று சூரியபூஜையும், மறுநாள் பௌர்ணமி அன்று மாலை ஆறரை மணிக்கு சந்திர ஒளி அவ்வாறே படுவதால் சந்திர பூஜையும் தொன்று தொட்டு நிகழ்ந்து வருகிறது.

### கல்யாண விரதம் பங்குனி உத்திரம்

பங்குனி மாதம் (சுக்லபட்க்ஷம்), பௌர்ணமி உத்திர நட்சத்திரம் கூடிய, சுபயோக சுபதினத்தில், உமாமகேஸ்வரருக்குத் திருக்கல்யாணம் செய்விப்பதே கல்யாண விரதமாகும்.

இவ்விரதம் சிரத்தா பக்தியுடன் உமாமகேஸ்வரர் விரதம் போல் அபிஷேக ஆராதனை செய்விக்க வேண்டும். முதலில் பொன்னாலோ, வெள்ளியாலோ, அல்லது ஐம்பொன் கலந்து செய்வித்த உமாமகேஸ்வரர் விக்கிரகம், (பிரதிமை) இருக்க வேண்டும். சுத்தமான நீர் நிறைந்த கலசம் வைத்து அதன் மேல் பிரதிமையை வைத்து, அபிஷேகம் செய்யவேண்டும். அபிஷேக சாமான்களுடன், முக்கியமாக பஞ்சாமிர்தம், பன்னீர் என்று அனைத்து வகைகளுடன் அபிஷேகம் செய்ய வேண்டும். அதன் பின் அலங்கரித்த மண்டபத்தில், மனையில் சர்வ அலங்காரங்களுடன், உலகங்களுக்கெல்லாம் அன்னையான உமாமகேஸ்வரருக்குத் திருக்கல்யாணமகோற்சவ வைபவத்தை செய்விக்க வேண்டும். அதன்பின் ஊஞ்சல் போல் செய்வித்து, ஊஞ்சல் ஆட்டல், நலுங்கு முதலான வைபவங்களையும் ஐதிகப்பிரகாரம் செய்வித்து மகிழலாம். அன்றைய தினம் சக்திக்குத்தக்கவாறு அன்னதானம் செய்

விப்பது என்பது மிகவும் விசேஷமானது. கல்யாண சாப்பாட்டைப் போல் அமர்க்களமாக எல்லாவகை களையும் சமைத்து நிவேதிப்பது மிகமிக அவசியம். மாலையில் கும்மி கோலாட்டம் செய்து மங்கள ஆரத்திகள், 'முத்து, பவழம், வைரம், மாணிக்கம் நவரத்தினம்' போன்றவைகளால் எடுத்து, பால்பழங் களுடன் ஸ்வாமி உள்ள கதவை மூடி விட வேண்டும்.

முத்து, பவழம், மாணிக்கம், வைரம், நவரத் தினம் - இவைகளால் ஆரத்தி எடுப்பது நடைமுறை யில் இயலாத ஒன்று. ஆதலால் ஜவ்வரிசி பெரிய அளவில் எடுத்து அதற்கு வர்ணம் கொடுத்து ஆரத்தி எடுக்கலாம்.

மறு நாள் காலை எழுந்து, காலை கடன்களை முடித்து, நீராடி, மடியுடன், சுவாமி உள்ள கதவைத் திறந்து, புனர் பூஜைகளை முடித்து அவ் விக்கிரகத்தை ஒரு சிவ பக்தரான அந்தணருக்குத் தானமாகக் கொடுத்து விடுவது நன்மை தரும்.

முன்னொரு சமயம் மகாவிஷ்ணுவானவர் இவ்விரதத்தை அனுஷ்டித்து, அதன் பயனாக மகா லக்ஷ்மியை தம் மனைவியாக அடைந்தார். அதைப் போலவே, பிரம்மா சரஸ்வதியையும், தேவேந் திரன் இந்திராணியையும், தங்கள் தங்கள் மனைவி யாக அடைந்து மகிழ்ந்தனர். சந்திரன் இவ் விரதத்தை அனுஷ்டித்து அசுவனி முதல் இருபத் தேழு நட்சத்திரங்களையும் தம் மனைவியாக அடைந்தான்.

அகஸ்திய முனிவரும் இவ்விரத மகிமை யால் லோபாமுத்திரை எனும் பதிவிரதையை மனைவியாக அடைந்தார்.

திருமாலின் புதல்விகளான அமிர்தவல்லி, சௌந்தர்ய வல்லி என்ற இருவரும், இவ்விரத மகிமையாலே, திருமுருகனருளைப் பெற்று, 'தேவ சேனை, வள்ளி' என்ற பெயர்களில் வேறு பிறவியை அடைந்து தேவசேனாபதியான ஆறுமுகப் பெரு மானையே கணவராக அடைந்து, மகிழ்ச்சிப் பெருக் குடன் வாழ்ந்து வருகிறார்கள்.

வேதாங்க முனிவரின் மகளான சுகேசி எனும் அழகிய மங்கை, இவ்விரதத்தை அனுஷ்டித்ததால் நந்தி தேவரை தன் கணவராக அடைந்து, தேவ மாதர்களினால் வணங்கிவழிபடப்பட்டு வருகிறாள்.

சத்ய பூரணர் என்ற தவச்சீலரின் இரண்டு விழிகளிலிருந்தும் அவதரித்த 'பூரணை, புட்களை', என்னும் இரண்டு பெண்களும், இவ்விரத மகிமை யால், ஸ்ரீமகா சாஸ்தாவிற்கு மனைவிகளாக ஆனார்கள்.

மன்மதன் ரதிதேவியை அடைந்ததும், ஜனக குமாரியான சீதாதேவி ஸ்ரீராமனை தன் நாயகனாக அடைந்ததும், கண்ணபரமாத்மாவை ஜாம்பவதி மணாளனாக அடைந்ததும், சௌபரீ முனிவர் இவ் விரதமகிமையால் அழகு வாய்ந்த அனேக ராஜ குமாரிகளை மணந்தது எல்லாம் கல்யாண விரதம்' என்னும் நோன்பை சிரத்தாபக்தியுடன் ஏற்றுச் செய்த தாலேயே ஆகும்.

பங்குனி உத்திரம் எனும், இத்திருக்கல்யாண உற்சவ வைபவம், சிவன் கோயில்களில் காணக் கிடைக்காத அற்புதக் காட்சியாகும்.

சகல பாபங்களையும் அழிக்க வல்லதுமான இந்த விரதத்தை சிரத்தையுடன் ஆசார அனுஷ் டானங்களுடன் முறைப்படி செய்வார்களேயானால், அவர்கள் சிவசங்கரருக்கும், பார்வதிதேவியாருக் கும், பிரியத்துக்குப் பாத்திரமானவர்களாகி, பல வித சுகபோகங்களையும் அனுபவித்து, சிவ லோகத்தை அடைந்து, கடைசியில் மோட்சத்தை யும் அடைவாரர்கள் என்பது திண்ணம்.

விரதமேற்று நடைமுறை வாழ்க்கையில் செய்ய இயலாதவர்கள், நீராடி, உமாமகேசுவரரை தியானித்து, பாயசம் நிவேதித்து, காலை முதல் சிவன் கோயில் சென்று அபிஷேக ஆராதனையுடன், திருக் கல்யாண மகோற்சவத்தை கண்டு களித்து வருவதும் மிகவும் விசேஷமானது என்று பெரியவர்கள் கூறு கிறார்கள்.

இன்னும் பலர் இவ்விரத மகிமையால் சகல சௌபாக்கியங்களையும் அனுபவித்து, சிறந்த புத்திர பௌத்திரர்களைப் பெற்று, மேன்மையாக வாழ்ந்திருந்து, கடைசியில் சிவலோகத்தையும், அதன் பின் மோட்சத்தையும் அடைந்திருக்கிறார் கள் என்று கந்த புராணம் கூறுகிறது.

## வேதம் போற்றும் முருகன்

''சதாசிவோம்'' எனச் சிவபெருமானைப் பாடும் வேதம்'' சுப்ரமண்யோம்''

என மூன்று முறை கூறிப் போற்றுகின்றது.

இதனை ஒட்டியே சேக்கிழார் பெரிய புராணத்தில் கண்ணப்பர் வரலாற்றில்

(1) மயிலுடை கொற்ற ஊர்தி

(2) வரையுரங் கிழித்த திண்மை

(3) அயிலுடைத் தடக்கை வென்றி அண்ணலார்

என முருகப்பெருமானை மூன்று முறை சிறப் பித்திருக்கக் காணலாம்.

# திருவாலவாயான் அங்கயற்கண்ணி திருமணம்

- அங்கயற் கண்ணி அடிமை

தெய்வங்கள் மதித்த மொழி தமிழ் மொழி கிளியின் பேச்சில் இயல் தமிழையும், குயிலின் குரலில் இசைத் தமிழையும் மயிலின் ஆட்டத்தில் நாடகத் தமிழையும் கண்டு உலகத்தையே முத்தமிழ் மய மாகக் கண்டனர் நம்மவர். பார்வதி தேவி மீனாட்சி யாகவும் சிவபெருமான் சோமசுந்தரபாண்டியனாக வும் முருகப்பெருமான் உக்கிர குமாரனாகவும் தோன்றி அரசாட்சி செய்த பேறு வேறு நாட்டிற்குக் கிடையாது.

உலகம் யாவையும் ஈன்றவன் உம்பருள் உயர்ந்த
திலக நாயகி: பரஞ்சுடர் சேய் எனமூன்று
தலைவரால் முறை செய்த நாடு இஃதன்றிச் சலதி
சுலவு பாரில் உண்டாகுமோ துறக்கத்தும் அஃதே

சிவபெருமான் தென்னாட்டில் திருப்பேரூரி லும், திருவாலங்காட்டிலும், சிதம்பரத்திலும் நடன மாடியது தென்னாட்டின் தென்றல் காற்றுத் தன் மீது பட்டு ஆடியதனால் ஏற்பட்ட களைப்பு நீங்க வும் இனிய செந்தமிழைச் செவியேற்று மகிழவும் என்றார் பரஞ்சோதி. தமிழின் மீதுள்ள அன்பினால் அம்மொழியின் இனிமையை நுகர விரும்பியே மதுரை வந்தனர் என்கிறார் குமர குருபர சுவாமிகள்.

சிவபெருமான், அம்மை, முருகப்பெருமான் மூவருமே பிறப்பு இறப்பு இல்லாதவர். அம்மை உலகத்தையே **கருதரிய கடலாடை உலகுபல் அண்டங்கருப்பமாய்ப் பெற்றி கன்னி** எனக் கூறு வார் சிவப்பிரகாச சுவாமிகள். மகா லட்சுமி கடலில் தோன்றினார். சீதாபிராட்டி பூமியிலிருந்து தோன்றி னாள். ஆண்டாள் துளசி வனத்தில் கண்டெடுக்கப் பட்டாள். பராசக்தியின் அம்சமான எவரும் ஒருவர் வயிற்றிலிருந்து தோன்றவில்லை என்பது குறிப்பு.

விச்சுவாவசு என்ற கந்தர்வனின் மகள் விச்சாவதி என்பவள் சக்திதேவியின் மந்திரத்தை நிறைய செபம் செய்த காலத்தில், தன் கையில் ஒரு கிளியை வைத்துக் கொண்டு மூன்று வயதுக் குழந்தையாக அம்மை தோன்றினாள். விச்சாவதி மன மகிழ்ந்து அம்மையைப் பலவாறு போற்றி வழுத்திப் புகழ, அம்மை ''உனக்கு என்ன வேண்டும்?'' எனக்கேட்க, ''உன் திருவடியை மறவாமை வேண் டும்?'' என்ன, அம்மை ''வேறு இன்னும் என்ன வேண்டும்?'' என்று கேட்க ''இதே மூன்று வயது குழந்தையாக என்னிடம் வந்து அருள வேண்டும்'' என்று வரங்கேட்டாள் விச்சாவதி.

இறைஞ்சி அஞ்சலித்தாள் தன்னை
'எம்மன்னையாது வேண்டினை என் என்றும்
நிறைந்த பேரன்பு என்றும் நின்னடிப்போதில்
நீங்கலா நிலைமைதந்தருள் என்று
அறைந்தனள்: இன்னும் வேண்டுவது ஏது?
என்று அருள: இம்மகவுருவாகிச்
சிறந்து வந்து என்பால் அருள்சுரந் திருக்கத்
திருவுளம் செய் எனப்பணிந்தாள்

அம்மை கொடுத்த வரத்தின்படி விச்சாவதி - காஞ்சனமாலை - என்ற பெயருடன் பிறந்து மது ரையை ஆண்ட மலையத் துவசபாண்டியனின் பட்டத்தரசியானாள்.

மதுரையை ஆண்ட பாண்டிய மன்னன் மக்க ளில்லையே என மனம் வருந்தி தொண்ணூற் றாறு அசுவமேதயாகம் செய்தான். அந்த யாகம் தேவேந்திர பதவியை அளிக்குமே தவிர மக்கட் பேற்றையளிக்காது. தேவேந்திரன் பாண்டியன் எதி ரில் தோன்றி மக்கட் பேறு பெற புத்திரகாமேட்டி எனும் யாகத்தை செய்யுமாறு கூறவும் பாண்டியன் அந்த மகவேள்வி செய்யத தொடங்கினான். மதுரை யில் யாகம் நடைபெற, கைலையிலிருந்த சிவ பெரு மான் அம்மையைப் பிரிந்து தனியரானார். பர்வத ராசன் மனைவியான மேனை தன்மகளான பார்வதி வேறு எங்கோ புறப்பட்டு விட்டாள் என எண் ணினாள். பதினெட்டு மொழிகள் பேசக்கூடிய பாரத நாட்டில் தமிழ் நாடு செய்த புண்ணியத்தால், தமிழ் மூவேந்தர்களில் பாண்டிய வேந்தர்கள் புகழடை யும் படியாக வேள்வித் தீயினின்றும் மூன்று வயது குழந்தையாகத் தோன்றி பாண்டி மாதேவியின் மடி மீதர்ந்தாள் அம்மை. உலக வழக்கத்திற்கு மீறி, மூன்று மார்புகளுடன் அம்மை தோன்றினாள்.



தெள்ளமுத மென்மழலை சிந்த இளமூரல்
முள்ளெயிறு அரும்பமுலை மூன்றுடைய
தோர் பெண்
பிள்ளையென மூவொரு பிராயமொடு நின்றாள்
எள்ளரிய பல்லுலகும் எவ்வுயிரும் ஈன்றாள்.

படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்து காரியங்களையும் செய்யக் கூடிய சக்தி தேவியை திருமகளாகப் பெறுவதற்குப் பாண்டியன் என்ன புண்ணியம் செய்தானோ! அத்தகைய அம்மை மகளாக வந்து மடிமீது அமர்வதற்கு காஞ்சனமாலை என்ன புண்ணியம் செய்தாளோ? என்றெல்லாம் நினையாத பாண்டியன் ''மக்கட் பேறில்லாத குறை நீங்க இந்த வேள்வி செய்தேன்! **அது ஒரு பெண் மகவையளித்துள்ளதே!** அதுமட்டுமா? அழகிய இப்பெண் குழந்தை இயற்கைக்கு விரோதமாக **மூன்று மார்புகளுடன்** தோன்றியுள்ளதே எனக் கவலைப்பட்டான்.

தேசத்தைக் கூட பாரத மாதா எனக் கூறி எல்லாவற்றையும் அன்னையின் வடிவமாக வணங்கும் நம்மவர் **பெண்குழந்தை** பிறந்தால் மட்டும் ஏன் கவலையுறுகிறார்கள் என்பதே புரியவில்லை.

''உலகத்தில் ஆண் குழந்தை பிறந்தால் சிறப்பு என்றும், பெண் குழந்தையைப் பெறுவது அவ்வளவு சிறப்பல்ல, துயரம் பெற்றமாதிரி என்று, துன்பமே பெண்ணுருவமாக வருகிறது, பெண்ணை ஒரு குழந்தையாக மதிக்கலாமா? என்பதோடு, புது மணமக்களை ''நல்ல ஆண்குழந்தை உங்களுக்குப் பிறக்கட்டும்'' என்றெல்லாம் ஆசி கூறுவோர் வாய் அடங்கி வெட்கப்படுமாறு, பர்வதராஜனுக்கு ஒரு பெண் குழந்தையாகப் பிறந்தாயே'' என மகாவித்வான் திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் திருவெண்ணீற்றுமை பிள்ளைத் தமிழில் (ஞானசம்பந்தர் திருமணம் செய்துகொண்ட தலம் திருப்பெருமணநல்லூர்) பாடியருளினார்கள். பெண் குழந்தை என்பது கேவலமல்ல என கற்பனைக்களஞ்சியம் சிவப்பிரகாச சுவாமிகள்

கற்றார் அறிகுவர்மக்கள் தம்பேறு எனக்
கட்டுரைத்த
சொல்தான் ஒரு பெண் ஒழித்தது என்பாரொடு
தொல்லுலகில்
நற்றாணமகப்பெறுக என்று ஆசி சொல்பவர்
நாண உனை
பெற்றான் மலையரையன் குன்றைவாழும்
பெரியம்மையே.

என்று பெரிய நாயகியம்மன் மீது பாடியருளினார். இவ்வாறு பெண்ணாகப் பிறந்ததே எனக்கவலை கொண்ட பாண்டியன் கேட்க ''அரசே! நின் மகளுக்கு ஆண்மகனுக்குக் கற்றுக் கொடுப்பது போல் யானை ஏற்றம், குதிரையேற்றம் முதலானவை கற்பித்துப்

பெயர் **தடாதகை** எனச் சூட்டுவாயாக (தகுதியான காரியத்தை - தகைமை நிறைந்த காரியத்தைத் தடுக்காதவள்) இவளை மதுரைக்கு அரசியாக முடி சூட்டுவாய். இவளுக்குத் தக்க நாயகன் எதிரில் தோன்றும் போது அதிகமான உறுப்பு மறைந்து விடும். கவலைப்படாதே'' என ஒரு அசரீரிகேட்டது. (மீன் தன்முட்டைகளை ஒரு முறை கண்ணால் பார்த்தால் குஞ்சுகள் வெளிவரும். அதனால் அம்மையை அழகிய மீன் போன்ற கண்களை உடையவள் **அங்கயற்கண்ணி - மீனாட்சி** என்பர்)

அசரீரி கேட்டு மகிழ்ந்த பாண்டியன் குழந்தையை அவ்வாறே வளர்த்து மதுரையின் அரசியாக முடிசூட்டி, தவஞ் செயக் காடுசென்றான். கன்னிப் பெண்ணாக இருந்த மீனாட்சி அரசாட்சி செய்ததால் பாண்டிய நாட்டிற்குக் **கன்னி நாடு** எனப் பெயர் வந்தது.

தன் மகளுக்குத் தக்க பருவத்தில் திரு மணம் நடைபெற வேண்டுமென்று கவலைப்பட்ட அன்னையிடம் தான் எல்லாதிக்குகளையும் வென்று வருவதாக அம்மைபுறப்பட்டு ஏழுதிசைகளையும் வென்று கடைசியாக வடதிசை சென்றாள். நம் நாட்டின் வடக்கெல்லையான மலைகளின் அரசன் எனத் திகழும் இமயமலையை அடைந்தாள். மலையில் அருவி கொட்டியது. அது ''என் அருமை மகளே! பார்வதியாக இருந்த நீ என்னை விட்டுவெகு நாட்கள் பிரிந்து, என் நினைவு வந்து இங்கு என்னை நோக்கி வருகிறாயா?'' என ஆனந்தக் கண்ணீர்விட்ட மாதிரி இருந்தது'' என்கிறார் பரஞ்சோதி

வானார் கயிலை மலையான் மகள் தன்னை நீத்துப்
போனாள் வந்தாள் என்று அருவிக்
கண்புனலுக்கு அந்நீர்
ஆனா ஒலியால் அனை வாவென்றழைஇத்தன்
தேசு
தானா நகையால் தழீஇயெதிர் ஏற்பச் சென்றாள்.

அருவியின் ஓசை அன்னையை ''வா, வா'' என அழைப்பது போன்றிருந்தது என்றார்.

சேனைகளுடன் அம்மை வருவது கண்டு சிவகணங்கள் தங்கள் தலைவனான நந்திதேவரிடம் கூற, அவர் சிவபெருமானின் உத்தரவு பெற்று, சிவகணங்களை அம்மையை எதிர்க் கும்படி செய்ய, அம்மை எதிரில் நிற்கமுடியாதபடி சிவ கணங்கள் சிதறியோடின. இதையறிந்த சிவபெருமான் தானே அம்மை எதிரிலே தோன்ற, **அம்மை தன் வலப்பாதியான இறைவனைக் கண்டாள்.** அம்மையப்பர்களின் ஒரே திருவுருவத்தை அர்த்த நாரீஸ்வரர் என திருச் செங்கோடு என்னும் தலத்தில் காணலாம். பட்டினத்தாருக்கு திருவிடைமருதூர் மகாலிங்கப் பெருமான் அம்மையப்பராகக் காட்சியளிக்க திருவிடைமருதூர் மும்மணிக்கோவை என்னும் நூலில் முதல் பாடலில் வலப்புறம் - இடப்புற உறுப்புக்களை மாறி மாறி வர்ணித்தார். பதினோராம் திருமுறையிலுள்ள பொன் வண்ணத் தந்தாதி (6-வது - 65வது பாடல்களிலும், கோயில் திருப்பண்ணியர் விருத்தும் (50வது பாடலிலும்) காரைக்கால் அம்மையார் திருவந்தாதி (41வது பாடலிலும்) இது போன்ற நுட்பத்தைக் கண்டு நுகர்ந்து மகிழலாம்.

அடுத்த செஞ்சடையொரு புறம் : ஒரு புறம்
அளகம்,
தொடுத்த கொன்றையோர் புறம்: ஒருபுறம்
மலர்த்தொடையல்
வடித்த சூலம் ஓர்புறம் : ஒரு புறம் மலர்க்குவளை
திடத்திலார் கழல் ஒருபுறம் ஒருபுறம் சிலம்பு.

என்றும்

பச்சைவண்ணம் : மற்றொரு புறம் பவளம்
கச்சுலாமுலை ஒருபுறம்: ஒருபுறம் கவின்மார்
அச்சநீங்கிய வரதமொன்று அபயம் அங்கை
இச்சையாம் இவர் உறுதல் கண்டு
இறைஞ்சினார் இமையோர்.

என்று அருணாசலபுராணம் கூறும். அம்மை இறைவனைக் கண்ட எல்லையில் **ஒரு முலை மறைந்தது.** அம்மைக்கு மூன்று மார்புகள். அவை இயல் இசை நாடகமான முத்தமிழ்கள். நடுமார்பு நாடகத் தமிழ் அது இறைவனைக் கண்ட மாத்திரத்தில் மறைந்தது என்றார் ஒரு பெரியவர். ஒரு சமயம் புதுக் கோட்டை மகாவித்வான் கனகராஜய்யர் அவர்களை இது பற்றிக் கேட்டேன். ''அம்மைக்கு பரஞானம் (கல்வியினால் ஏற்படும் அறிவு) அபரஞானம் (வயது முதிர்ந்து இறைவனருள் பெற்று அனுபவத்தினால் ஏற்படும் அறிவு) (அறியாமையை) மூன்றாவது மார்பாகக் கொண் டாள். இறைவனது நோக்கம் ஏற் பட்டால் அறியாமை மறையும் என்பதைக் காட்டவே அம்மை மூன்று மார்புகளுடன் தோன்றினாள்'' எனக் கூறி

உலகெலாம் படைத்துக் காத்து அருளுகின்ற
கயற்கண்ணி உருவத்துள்ளே
இலகுகின்ற நகில் மூன்றுள் வலப்புறத்தும்
இடப்புறத்தும் இருக்கும் பாகம்
நலம் நவின்ற பரஞானம் அபர ஞானம் என
நவிலற்பாற்றாம்
விலக இடை மறைந்ததொன்றோ அஞ்ஞானம்
என அடியேன் விளம்புவேனே.

என்ற பாடலைப்பாடினார். நடுமார்பு மறைந்து இவர்தான் தனது நாயகன்' என அறிந்து நாணத்தால் தலைகுனிந்து நின்ற அம்மையை நோக்கிய இறைவன் ''என்று நீ திக்கு விஜயம் எனப்புறப்பட்டாயோ அன்று முதல் உன்னைத் தொடர்ந்து வந்தோம். நீ மதுரை செல்க. திங்கட்கிழமையன்று மதுரையில் வந்து திருமணம் புரிந்து கொள்வோம்'' என்றார். **சிவசக்திகள் என்றும் பிரியாது** என்பது குறிப்பு. மூவுலகமாதாவான மீனாட்சி மதுரை திரும்பினாள். மதுரை திருமணக் கோலம் கொண்டது. இறைவனது திருமணத்தைக் காண எல்லாத் தேவர்களும் மதுரையில் கூடினர். **சுரிசங்கேந்திய திருநெடுமாலும் - வரன்முறை படைத்த நான்முகத் தொருவனும் - பீடுயர் தோற்றத்துக் கோடி உருத்திரரும் - ஆனாப்பெருந்திறல் வானோர்தலைவனும - வாம்பர் இயக்கர் தாம் பன்னிருவரும் - சந்திரனொருவனும் செந்திக்கடவுளும் - நிருதியும் சமனும் வருணனும் வாயுவும், எட்டுநாகமும் அட்டவசுக்களும் - மூன்று கோடி ஆன்ற முனிவரும் - வசிட்டனும் கபிலனும் அகத்தியன் தானும் தும்புரு நாரதர்** முதலிய அனைவரும் கூடினர். இறைவன் தனது நந்தி வாகனத்தில் மதுரைக்கு எழுந்தருளினார். **மங்கலமகளிரோடு** காஞ்சன மாலை எதிர் கொண்டழைத்தாள். மதுரை மக்கள் எல்லையில்லா மகிழ்ச்சியடைந்தனர். மணமேடையிலமர்ந்திருந்த இறைவனிடம் வந்த திருமால் அம்மையின் திருக்கரத்தை இறைவனது திருக்கரத்துச் சேர்த்து வைத்துத் தாரை வார்த்தார்

அத்தலை நின்ற மாயோன் ஆதி செங்கரத்து நங்கை
கைத்தலம் கமலப் போது பூத்ததோர் காந்தளொப்ப
வைத்தரு மனுவாயோதிக் கரகநீர் மாரிபெய்தான்
தொத்தலர் கண்ணி தொழுது பூமாரி பெய்தார்.

அதன் பின்னர் நாலு வேத கோஷங்களுக்கிடையே பல வாத்தியங்கள் முழங்க பிரமதேவன் மந்திரங்கள் கூற அம்மை திருக்கழுத்தில் மங்கலியம் பூட்டி திருக்கையைப் பிடித்து இறைவன் திருமணம் செய்து கொண்டார்.

சுற்று நான்மறைகள் ஆர்ப்பத் தூரியம் சங்கம் ஏங்க
கற்ற நான்முகத்தோன் வேள்விச் சடங்குநூல் கரைந்தவாற்றால்
முற்றுமங்கல நாண் சாத்தி முழுதுலகீன்றாள் செங்கை
பற்றினான் பற்றிலார்க்கு வீடருள் பரமயோகி.

அம்மி மிதித்தல் அருந்ததி பார்த்தல் முதலான சடங்குகள் முறைப்படி நிறைவேறின. சீதாராமர் திருமணத்தில் திருமணம் செய்து வைத்த புரோகிதரான வசிட்டர்தன் மனைவியான அருந்ததியுடன் அமர்ந்திருந்தார். **எதிர் நின்ற கலங்கலில் கற்பின் அருந்ததி கண்டார்** என்பது கம்பன் வாக்கு. மதுரையில் மீனாட்சியம்மையைத் திருமணம் செய்து கொண்டபோது **புண்ணிய வசிட்டன் தேவி எங்கெனச் செங்கை கூப்பி எதிர் வர அருட்கண்சாத்தி** எனப் பேசுகிறார் திருவிளையாடல் புராணமுடையார்.

மற்ற தேசங்களில் அரசனைத் திருமணம் செய்து கொண்டவர் அரசியாவார். பாண்டிய தேசத்தில் அரசியான தன்னை மணந்து கொண்டவரை சோம சுந்தரபாண்டியர் என்ற திருநாமத்துடன் அரசனாக விளங்கச் செய்தாள் அம்மை மீனாட்சி என்கிறார் பரஞ்சோதி.

திருமணத்திற்காக சிதம்பரத்திலிருந்து வந்திருந்த புலிக்காலோன் (வியாக்ரபாதர்) பன்னக அரசு (பதஞ்சலி) இருவரும் நடராஜப் பெருமானின் தரிசனம் செய்து தான் உணவுண்பது தங்களது நியமம் எனக் கூற அவர்களுக்காக மதுரையில் வெள்ளியம்பல மண்டபம் உண்டாக்கித் தானே நேராகச் சிவபெருமான் நடனம் புரிந்தார்.

கங்கையாறு அலம்பும் ஓசை : கடுக்கைவண்டு இரங்கும் ஓசை:
செங்கையாடு எரியின் ஓசை: திருவடிச்சிலம்பின் ஓசை
மங்கல முழவினோசை! மந்திரகீத ஓசை
எங்கணும் நிறைந்து அன்பர் இரு செவிக்கு அமுதமூற்ற

எனப்பேசுகிறது பரஞ்சோதியின் மந்திரக்கவிதை. வியாக்ரபாதர் பரஞ்சோதி முனிவர் இருவருடைய வேண்டுகோளுக்கு இணங்கி, அதே நடனத்திருக் கோலத்தில் உலகத்தவர் இன்றும் தரிசித்து உய்யும் நிலையில் சிவபெருமான் மதுரையில் காட்சி கொடுக்கிறார்.

**அடிசார்ந்தவர்க்கு முடியாச் செல்வம் நிறையக் கொடுப்பினும் குறையாச் செல்வன்** சிவபெருமான். அம்முறையில் சிவபெருமானின் திருமணத்திற்கு வந்த அனைவரும் உணவுண்ட பின்னும் சமையல் செய்த உண்டிகள் குறையவில்லை. தனது பரிவாரங்களில் ஒருவனான குண்டோதரனைச் சிவபெருமான் அவ்வளவு சோற்றையும் உண்ணுமாறு ஏவினார். அவ்வளவையும் உண்டு குண்டோதரனின் பசியடங்கவில்லை. குண்டோதரன் **இட்டு உண்ணாதவர் வயிறுபோல் காந்துதே** என வருந்துகின்றான். **ஐயம் இட்டுண்** என்றபடி நல்லோருக்கு உண

வளிக்காதவன் வயிறு என்றுமே காந்தும் என்பது குறிப்பு. சிவபெருமானின் ஏவலால் தனது சக்தி அம்சங்களில் ஒன்றான அன்னபூரணியென்னும் தன் சக்தி மூலம் ஏழு குழிகளில் தயிர் சோறு வரவழைக்க அதை உண்டு குண்டோதரன் பசியடங்கினான். முதலில் குழம்புச்சோறு உண்கிறோம். அதில் ஏதாவது ஒரு காயைப்போட்டு அந்தக் காய்த்துண்டுக்குத் தான் பெயரிட்டுக் குழம்பை அழைக்கிறோம். **தானோடு கூடியது குழம்பு. 'தான்' என்ற அகந்தையுடன் கூடி மனிதன் குழம்புகிறான்.** அடுத்தது தான் இல் லாது ரசம் சோறு உண்கிறோம். ரசம் தெளிவானது. **தான் என்பது நீங்கினால் ரசானுபவமான தெளிவை அடைகிறான்.** நான் என்ற அகந்தையை நீங்கினால் தெளிவடை கிறான். இது மனிதனின் **இரண்டாவது நிலை.** 'தான்' என்பது நீங்கினால் இறைவது நினைவு நமக்குக் கிடைக்கும் என்பதே உண்மை. மூன்றாவ தாக இனிய பாயசத்தை உண்கிறோம். இறைவனின் இனிமை பாயசம். அதை அறிந்தவுடன் குளிர்ந்த இறைவனின் அருள் கிடைக்கிறது என்பது தான் குளிர்ச்சியான மோர் அல்லது தயிர்ச்சோறு உண்பது. மனிதனுடைய உணவுண்ணும் செயலிலும் அழகிய தெய்வீகக் கருத்தைக் காட்டியருளினர் நம் முன் னோர்கள். அவ்வாறு உணவுண்ட குண்டோதரன் தாகம் கொண்டான். இறைவனிடம் வேண்டியிருந் தால் உடனே தாகம் தணிந்திருக்கலாம். தன்னால் முடியும் என்ற எண்ணத்தில் ஊரிலுள்ள எல்லா நீர்நிலைகளையும் வறண்டு போகுமாறு குடித்தும் தாகம் தணியவில்லை. **அம்மையப்பர்களான மீனாட்சி சுந்தரேசுரர்கள் சோறு போட்டனர். தனது மற்றொரு தேவியான கங்கையை மதுரைக்கு வடபுறத்தில் நதியாகப் பெருகி வருமாறு இறைவன் கூற** கங்கை பெருகி வந்து வேகமாக வந்ததால் **வேகவதி** என பெயர் கொண்டு வந்து குண்டோதரன் தாகம் நீங்கத்தண்ணீர் அளித்தது. ஒரு அன்னை அன்னபூரணி யாக வந்து சோறளித் தாள். மற்றொரு அன்னை தண்ணீரை அளித்தாள். குண்டோதரன் தாகம் தணிந்து இறைவன் எதிரில் பாடிக் கொண்டு நிற்கிறான் என் பது வரலாறு.

புராணத்திருமணங்களில் மிகவும் உயர்ந்தது மீனாட்சி திருமணம். மணமகன் தானே நாட்டியமாடி மக்களை மகிழச் செய்ததுடன், அனைவருக்கும் உணவளித்துத் தாகம் தீர்க்க ஒரு நதியையும் வர வழைத்தான் என்பர். வேகமாக வந்து குண்டோதர னின் தாகத்தைத் தீர்த்த நதியை வேகவதி என்றும் சிவகங்கை, சிவஞான தீர்த்தம் என்றும் அழைப்பர். வேகவதி என்பது மருவி வைகை என்று ஆயிற்று என்பர்.

முக்கியமான எழுத்தான **ரா** என்பது, ஐந் தெழுத்தின் முக்கியமான எழுத்தான **ம** என்பதுடன் சேர்ந்து **ராம** என்ற மந்திரமாக வந்தது என்பர். அம்மையான ஆண்டாளின் பெயரின் முதலெழுத்தான **ஆ** என்ற முதலெழுத்துடன் **''ஆதியும் அந்தமுமில்லா அரும் பெருஞ்சோதி** என் மாணிக்க வாசகர் தமது திரு வெம்பாவையைப் பாடினார். அதுபோல் அவரது பெயரின் முதல் எழுத் தான **மா** என்ற எழுத்துடன் **மார்கழித்திங்கள்** என்று தனது திருப்பாவையைத் தொடங்கினாள் நாச்சியார் என வினோதமாகச் சிலர் கூறுவர்.

அம்முறையில் வைகுண்டபதியான நாராய ணன் கைலைநாதனான சிவபெருமானுக்குத் தனது சகோதரியான மீனாட்சியைத் திருமணம் செய்து கொடுத்ததால் இருவருடைய வாசத்தலங்களான வைகுண்டத்தின் முதலெழுத்தும், கைலையின் முத லெழுத்தும் சேர்ந்து **வைகை** எனப் பெயர் வந்தது என்பர். புண்ணியவான்களின் பக்தி நிலைக்கு வைகுண்டபதவியையோ கைலைப்பதவியையோ கொடுப்பதால் **வைகை** எனப்பெயர் வந்தது என்பர்.

திருவிளையாடற் புராணம் கேட்பவர் எல்லா நலன்களையும் அடைவர். அத்தகைய நலன்களை யளிக்கும் மீனாட்சி சுந்தரேசுவரர்கள் நம் அனை வரையும் காக்க வேண்டுவோமாக!

திங்களணி திருவாலவாய் எம் அண்ணல்
திருவி ளையாட்டு இவை அன்பு
செய்துகேட்போர்
சங்கநிதி பதும நிதிச் செல்வமோங்கித்
தகைமை தருமகப்பெறுவர்: பகையை
வெல்வர்:
மங்கல நன்மணம் பெறுவர்: பிணிவந்தெய்தார்
வாழ்நாளும் நனிபெறுவர்: வானாடெய்திப்
புங்கவராய் அங்குள்ள போக மூழ்கிப்
புண்ணியராய்ச் சிவனடிக் கீழ்
நண்ணிவாழ்வார்.

அன்னை மீனாட்சி அப்பன் ஆலவாயான் திருவடிகளே சரணம்.

★★★

# திருவிழாக்கள் - நோக்கமும் பயனும்

- டாக்டர் பருத்தியூர் சந்தானராமன்

## முன்னுரை

''இந்து மதம்'' என்பது ஆங்கிலேயர்கள் நம் சமயத்திற்கு இட்ட பெயர். தொன்று தொட்டு இருந்து வரும் நமது சமயத்தை நம்மவர் 'சனாதன தர்மம்' என்று அழைத்தனர். 'வேதமார்க்கம்' என்ற வேறு பெயராலும் குறிப்பிட்டனர்.

''வேத நெறி தழைத்தோங்க, மிகு சைவத் துறை விளங்க'' என்ற சேக்கிழாரின் பெரியபுராணச் சொற்றொடர் இதனைத் தெளிவாக்கும்.

மனிதனின் நல்லொழுக்கம், மன அமைதி, ஆன்மிக மேம்பாடு, சமுதாய நல்லிணக்கம் போன்ற உயர்ந்த நோக்கங்களைக் கொண்டது நமது சமயம்.

திருக்கோயில்களும், திருவிழாக்களும் அதே நோக்கத்துடன் தான் தோன்றின. அன்றாட உழைப்புக்கு இடையே மக்கள் தங்களை உற்சாகப்படுத்திக்கொள்ளவும், மன அமைதி பெறவும் திருவிழாக்கள் உதவுகின்றன.

இலக்கியக் கருத்துக்கள், இசை, நடனம், நாடகம் முதலிய அனைத்துக் கலைகளின் வெளிப்பாட்டிற்கும் திருவிழாக்கள் வாய்ப்பை அளிக்கின்றன.

பல வகையான பணியாளர்களுக்கும் திருவிழாக்களில் வேலை வாய்ப்பு கிடைக்கின்றது. விருந்தோம்பல் முதலிய இல்லறக் கடமைகள் இனிதே நிறைவேறுகின்றன.

## திருவிழா - நால் வகை

பெரிய திருக்கோயில்களில் தினசரி வழிபாடுகளே திருவிழாப் போல் நடைபெறும். சுவாமி உட்புறப்பாடு முதலியன இடம் பெறும். இந்த அன்றாடத் திருவிழாவை நித்யோத்ஸவம் என்பர்.

பதினைந்து நாட்களுக்கு ஒருமுறை நடைபெறும் பிரதோஷம் போன்ற விழாக்கள் 'பட்சோத்ஸவம்' எனப்படும்.

மாதமொரு முறை நடைபெறும் விழா 'மாஸோத்ஸவம்' எனப்படும். மாத சிவராத்திரி போன்றவை இவ்வகைத் திங்கள் திருவிழாக்களாகும். 'ஸம்வத்ஸர உத்ஸவம்' என்பது ஆண்டுப் பெருவிழா ஆகும்.


சிவ விஷ்ணு ஆலயத்திருவிழாக்களை பிரம தேவன் முதலில் தொடங்கி நடத்தியதால் அவற்றைப் பிரம்மோத்ஸவம் என்று குறிப்பிடுகின்றனர்.

சிவாலயத்திருவிழாக்கள் சித்திரையில் அப்பர்திரு நட்சத்திரத்துடன் தொடங்கிப் பங்குனியில் திருக்கல்யாண வைபவத்துடன் நிறைவடைகின்றன. பெரும்பாலும் திருக்கோயில் விழாக்கள் வளர்பிறையில் தொடங்கி பௌர்ணமி நாளில் நிறைவடைகின்றன, இருளின் இடர்ப்பாடின்றி இயற்கையான நிலவொளியில் மக்கள் விழாக்களைக் கண்டு மகிழ இந்த அமைப்பு பெரிதும் ஏற்றதாகவுள்ளது.

கற்சிலைகளான மூலத் திருமேனிகள் திருக்கோயில்களின் கருவறையில் நிரந்தரமாய்ப் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன. அவற்றின் அபிஷேக ஆராதனைகளை அங்குச் செல்லும் பக்தர்கள் மட்டுமே காண இயலும்.

பஞ்சலோகத் திருமேனிகள் விழாக் காலங்களில் சிறப்பான ஆராதனைகளுக்குப்பின் வீதி உலாவாக வரும் பொழுது திருக்கோயிலுக்குச் செல்ல இயலாத முதியோர், நோயாளிகள் போன்றவர்களும் கண்டுமகிழ வாய்ப்பளிக்கின்றன. நாதசுவரம் முதலான வாத்திய இசைகளைக் கேட்கவும், வாண வேடிக்கை மற்றும் கிராமியக் கலைகளைப் பார்த்து மகிழவும் திரு உலா வழி வகுக்கின்றது.

கொடியேற்றம் குண்டலினி சக்தியை மேலெழுப்பும் யோகத்தத்துவத்தை உணர்த்துகிறது. அத்துடன் வழிபாடு செய்யத் தொடங்கும் மனிதனின் எண்ணங்கள் உயர்ந்தவையாக இருக்க வேண்டும் என்பதையும், அப்படியிருக்கும் மனிதனின் வாழ்வு உயர்வடைகிறது என்பதையும் கொடியேற்றம் உணர்த்துகிறது.



மயில் வடிவில் உமையாம்பிகை அருள்மிகு கபாலீசுவரரை வழிபடும் திருக்காட்சி

கடவுளரின் ஊர்திகள் (வாகனங்கள்) கண்ணுக்கு விருந்தளிப்பதுடன் ஆழ்ந்த தத்துவங்களையும் உணர்த்துகின்றன.

எடுத்துக் காட்டாக பிரணவத்தின் பொருள் நானே என மார்தட்டும் பெருமான் முருகன் பிரணவ வடிவான தோகை மயில் வாகனத்தில் வருகின்றான்.

தருமத்தின் வடிவான ரிஷபம் ஈசனுக்கு ஊர்தியாகிறது. தன்னலம் கருதாத தியாகம், உழைப்பு ஆகியவற்றை ரிஷபம் உணர்த்துகிறது.

அம்பிகையின் சிங்கவாகனம் சக்தியின் மேலாண்மையையும். பெண்மையின் கம்பீரத் தன்மையையும் உணர்த்துகின்றது.

**பன்னிரு மாதத் திருவிழாக்கள்**

இனி சித்திரை முதல் பங்குனி வரை நிகழும் முக்கியமான விழாக்களைப் பற்றிய விவரங்களைக் காண்போம்.

சித்திரை மாத சதயத்தில் தேவார மூவரில் ஒருவரான அப்பர் பெருமானின் தொண்டினைப் போற்றும் விழா எடுக்கின்றனர். அவர் வாழ்வில் கடைப்பிடித்த உழவாரப் பணியை நினைவிற் கொண்டு திருக்கோயில்களைப் பாதுகாக்கும் கடமையை நாமும் பின்பற்ற இவ்விழா உதவுகிறது.

சித்திரை பௌர்ணமியில் சிவாலயத்திரு விழாக்களும் அம்மன் மற்றும் முருகன் கோயில் திருவிழாக்களும் சிறப்பாக நடைபெறுகின்றன. தென் மாவட்டங்களில், குறிப்பாக மதுரையில் சித்திரைத் திருவிழா விரிவாகக் கொண்டாடப் படுகிறது.

ஸ்ரீராமநவமி வைணவத் திருக்கோயில் களில் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. சில ஆண்டுகளில் இவ்விழா பங்குனியில் வந்தாலும் ஸ்ரீ இராமர் அவதரித்தது சித்திரை நவமி புனர்வசு நட்சத்திரம் என்பதை அனைவரும் அறிவர்.

மனிதன் எப்படி வாழ வேண்டும் என் பதைத்தன் வாழ்க்கையால் நடந்து காட்டிய இராம னைப் போற்றுதல் ஏற்புடைத்தன்றோ? இவ்விழா வின் போது இராமாயண இலக்கியத்தைப் பல்வேறு கோணங்களில் அறிஞர் பெருமக்கள் விளக்கவுரை களின் வழியே செவிக்கு விருந்தளிக்கின்றனர்.

வைகாசியில் முருகன் திருக்கோயில்களில் ஆண்டுப் பெருவிழா நடைபெறும். வைகாசி விசாகம் முருகன் உதித்த நன்னாள். திருச் செந்தூர் முதலான தலங்களில் வைகாசி விசாகம் சிறப்பாக நடைபெறுகிறது.

திருஞான சம்பந்தரின் திரு நட்சத்திரம் வருவது வைகாசியில் தான். தமிழ் மறுமலர்ச்சியின் தந்தை என்று போற்றத்தக்க ஞானக் குழந்தையின் விழாவில் நாளும் அவர் வளர்த்த தமிழையும் தமிழிசையையும் போற்றுகிறோம்.

சங்கரர், இராமானுஜர் ஆகிய இருவரின் ஜெயந்தி விழாவும் வைகாசியில் தான்!

ஆனி மகத்தில், திருவாசகத்தை அருளிய மாணிக்க வாசகரின் திருநட்சத்திரம் வரும். சிவாலயங்களில் இவ்விழா நடைபெறும்.

நடராஜப் பெருமானுக்கு உகந்தவை ஆறு அபிஷேக தினங்கள். அவற்றில் ஒன்றுதான் 'ஆனித் திருமஞ்சனம்! இது சிதம்பரத்தில் வெகுவிமரிசையாக நடைபெறுகிறது.

ஆடி மாதத்தில் அம்மன் கோயில் திருவிழாக்களைக் கொண்டாடுகின்றனர். ஏழை எளிய பாமர மக்கள் ஆடித் திருவிழாவை ஆவலுடன் கொண்டாடி மகிழ்கின்றனர்.

ஆண்டாள் அவதரித்த ஆடிப் பூரம் திருவில்லிப்புத்தூரில் மிகச் சிறப்பாக நடைபெறுகின்றது. அம்மன் கோயில்களிலும் ஆடிப்பூரத்தை ஒட்டிய சிறப்பு ஆராதனைகள் நிகழ்கின்றன.

சங்கரன் கோயில் 'ஆடித்தபசு' விழா சிவ - விஷ்ணு பேதத்தை அகற்றும் விழாவாகும். கோமதி அன்னை தவமியற்றி சங்கர நாராயணரைத் தரிசித்து நமக்கும் அத்தரிசனத்தைச் செய்து வைக்கிறாள்.

காவிரிக் கரையில் வாழ்வோர் தங்களுக்கு வாழ்வளிக்கும் காவிரி அன்னையைப் போற்றி வரவேற்று ஆடிப் பதினெட்டாம் பெருக்காகக் கொண்டாடுகின்றனர்.

செந்தமிழ்த் தேவாரத்தை அளித்த சுந்தரரின் திரு நட்சத்திரம் ஆடிச் சுவாதி ஆகும்.

ஆவணி மூலம்! இத இறைவன் மாணிக்க வாசகருக்காக நரியைப்பரியாக்கி, பிட்டுக்கு மண் சுமந்த நன்னாள். மதுரையில் ஆவணி மூலம் நடைபெறும் சிறப்பை அனைவரும் அறிவர்.

இதே மாதத்தில் தான் இரு பெரும் விழாக்கள் ஒன்று விநாயகர் சதுர்த்தி! மற்றொன்று கண்ணன் பிறந்த ஸ்ரீ ஜெயந்தி!

ஆவணி முதல் ஞாயிற்றில் நிறைவுபெறும் பன்னிரு திருமுறை விழா மயிலை கபாலீச்சரத்தில் கோலாகலமாகக் கொண்டாடப்படுகிறது.

பன்னிரு திருமுறைகளை ஓதுதலும், உரையாற்றி விளக்குவதும், நிறைவு நாளில் திருமுறை காண்டலும், அவற்றை யானை மீது அமர்த்தி உலாவாக எடுத்து வருவதும்மயிலையில் மட்டுமே காணக் கிடைக்கும் அரிய விழா.

## திருமண் - திருநீறு

இந்துக்கள் நெற்றியில் திருமண் இடுபவர்களாகவோ, திருநீறு பூசுபவர்களாகவோ இருக்கிறார்கள். எல்லாம் விஷ்ணுமயமான இந்த மண்ணில் தோன்றி மண்ணிலே மடிகிறோம் என்பதை உணர்த்துவதே திருமண். சரீரம் எரிந்து பஸ்மமானதும் எஞ்சி நிற்பது சாம்பல் ஒன்று தான் என்பதை உணர்த்துவது திருநீறு. ஆகவே இவை நம் மதச்சின்னங்களாக மாறின.

- ஐயாறு கிருஷ்ணன்

புரட்டாசியில் அம்பிகைக்கு உகந்த நவராத்திரி விழா நடைபெறுகின்றது. சக்தியின் அருளாற்றலைப் போற்றுவதன் மூலம் பெண்மை ஏற்றம் பெறுகின்றது.

இல்லந்தோறும் இவ்விழா உண்டு. மகளிர் ஒருவரையொருவர் வரவேற்று உபசரிக்கும் திருவிழாவாக நவராத்திரி அமைகிறது.

நிறைவு நாள் ஆயுத பூஜை அல்லது சரஸ்வதி பூஜை. கலைமகளையும் கருவிகளையும் வழிபட்டு, 'செய்யும் தொழிலே தெய்வம்' என்ற உயர்ந்த இலட்சியத்தை நடைமுறைப்படுத்துகின்றனர்.

அடுத்த நாள் கல்வித் தொடக்கமும், அவரவர் செய்தொழில் தொடக்கமும் நிகழ்கின்றன.

புரட்டாசி திருமால் வழிபாட்டுக்கு மிக்வும் உகந்த மாதம். புரட்டாசி சனிக்கிழமைகளில் புருஷோத்தமனைப் போற்றிப் பணிகின்றனர்.

திருப்பதி ஏழுமலையான் ஆண்டு பெருவிழாக் காண்பது புரட்டாசியில் தான்.

விவசாயப் பெருங்குடி மக்கள் தாம் விளைவித்த தானியங்களையும் காய்கறி வகைகளையும் திருக்கோயில்களில் கட்டி அலங்கரிக்கும், 'நிறைமணி' விழா புரட்டாசி பௌர்ணமி நாளில் கொண்டாடப்படுகிறது.

இது ஒரு வேளாண் பொருட்காட்சியாகவே அமைகிறது!

ஐப்பசித் திங்களில் ஆறுமுகனுக்கு உகந்த கந்தர் சஷ்டி பெரு விழா! சூரசம்காரமும் வள்ளி தெய்வயானை திருக்கல்யாணமும் எல்லா ஊர்களிலும் நடைபெறுகின்றன.

ஆணவம் கன்மம், ம்ாயை என்ற மும்மலங்களும் ஞானத்தினால் அழிக்கப்படுகிறது என்பது சூரசம்காரத் தத்துவமாகும்.

சூரன், சிங்கமுகன், தாரகன் ஆகிய மூவரும் முறையே ஆணவம், கன்மம் மாயை ஆகியவற்றை உணர்த்துபவர்கள். அவற்றைச்சம்கரிக்கும் முருகனின் கைவேல் ஞானத்தைக் குறிப்பதாகும்.

ஐப்பசி பௌர்ணமி நாளில் சிவபெருமான் அன்னாபிஷேகம் செய்து கொள்கிறார்.

கார்த்திகை பௌர்ணமி தீபத்திருநாள்! அண்ணாமலை தீபம், சர்வாலாய தீபம், அத்துடன் இல்லங்களைத் தீபங்களால் அலங்கரிக்கும் ஒளி விழா.

எட்ட முடியாத ஜோதி வடிவாய் இறைவன் விளங்குகிறான் என்பதை உணர்த்துவது தீபத்திருநாள்.

கார்த்திகை சோமவாரங்களில் திருக்கடவூர், மயிலை முதலான திருத்தலங்களின் ஈசன் கங்காதரன் சங்கினால் அபிஷேகம் கொள்கிறான்.

மாதங்களில் சிறந்த மார்கழியில் மணிவாசகர் மற்றும் மங்கையர் திலகம் ஆண்டாள் பிராட்டி ஆகியோரின் பாவை இலக்கியங்களைப் பாடி விளக்கப்படும் விழாக்கள் பட்டி தொட்டிகளில் எல்லாம் நடைபெறுகின்றன.

ஆடல்வல்லானின் ஆதிரைத் திருவிழாவும் மார்கழியில்தான்!

அவ்வாறே அணி அரங்கனின் சொர்க்க வாசல் திறக்கும் வைகுண்ட ஏகாதசியும் மார்கழியின் சிறப்புக்கு மகுடம் சூட்டுகின்றது.

எண்கண் பூசம், திருச்சேறை சாரநாதர் பூசம், வடலூர் பூசம் இவையெல்லாம் தை மாதத் திருவிழாக்கள்.

இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளிலும் பூசத்திருநாள் சிறப்பாகவே நடைபெறுகிறது.

தைப்பூசத் திருநாளையொட்டி திருக்கோயில்களில் தெப்பத் திருவிழா நடைபெறுகிறது.

தரையில் வீதி உலாக் கண்ட கடவுளருக்குத் தண்ணீரிலும் உலாவரும் விழாக் கொண்டாடுகின்றனர்.

பிறவிக் கடலைக் கடக்க ஈசன் திருவடியென்னும் தெப்பமே துணை என்ற வள்ளுவர் வாக்கு விளக்கம் தரும் விழாவே தெப்பத் திருவிழா!

சென்னை மயிலை கபாலீச்சரம் மற்றும் வெள்ளீச்சரத்தில் தை மாதத்தில் 'வனபோஜன' விழா நடைபெறுகிறது. அப்போது முருகன் குடிசைப் பகுதிகளுக்கு எழுந்தருளி அடித்தளத்து மக்களின் அன்பான அபிஷேக ஆராதனைகளைப் பெற்றுத் திரும்புகிறான்.

அவ்வாறே சமத்துவ பக்திக்குச் சான்றாகத் திகழும் ஐயப்பன்மார்களுக்கு ஹரி ஹர சுதன், மகர ஜோதியாகக் காட்சிதரும் விழாவும் தைமாதத்தில் வருகிறது.

மாசியில் வருவது மகம். இவ்விழா கும்பகோணத்தில் மிகச்சிறப்பாக நடைபெறுகிறது. பன்னிரெண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை மகாமகம் வரும். அப்போது பல்வேறு மாநில மக்களும் குடந்தையில் கூடுகின்றனர். மகாமகக் குளத்தில் நீராடி மகிழ்கின்றனர்.

சென்னையில் உள்ள அனைத்துக் கோயில் அம்பிகைகளும் மாசிமகநாளில் கடற்கரைக்கு எழுந்தருளி தீர்த்தம் பாலிக்கின்றனர். அவ்விழாவில் முதலில் தீர்த்தம் பாலிக்கும் பெருமான் தீர்த்தபாலீசுவரர் என்றே பெயர் பெற்றுள்ளார்.

மாசிமாதத்தில் கொண்டாடப்படும் முக்கியமான திருவிழா மகாசிவராத்திரி. ஜோதிர் இலிங்க தலங்களில் மகா சிவராத்திரியன்று தரிசனம் காண பல இடங்களிலிருந்தும் பக்தர்கள் செல்கின்றனர்.

அனைத்து சிவாலயங்களிலுமே அன்று இரவு நான்கு கால அபிஷேகம் கொள்கிறார் சிவபெருமான். இலங்கையிலுள்ள திரிகோணமலை மற்றும் திருக்கேதீஸ்வரம் ஆகிய தலங்களில் மகாசிவராத்திரி பெரும் ஈடுபாட்டுடன் கொண்டாடப்படுகிறது.

பங்குனியில் உத்திரப் பெருவிழா பல்வேறு திருக்கோயில்களிலும் ஆண்டுப் பெருவிழாவாக அமைகிறது.

திருவாரூர் பங்குனிப் பெருவிழாவும் தேரோட்டமும் பெரும் புகழ் பெற்றவை.

திருப்பரங்குன்றம் முதலானமுருகன் தலங்களிலும் பங்குனி உத்திரப் பெருவிழா உண்டு.

### மயிலை விழாவின் சிறப்பு

சென்னை மயிலாப்பூர் கற்பகாம்பாள் உடனுறை கபாலீச்சுவரர் கோயில் பங்குனிப் பெருவிழாவில் எட்டாம் நாள் அறுபத்து மூவர் விழா நடைபெறுகிறது.

மனிதராகத் தோன்றிய பக்தர் ஒருவர் மாபெரும் சிவபுண்ணியத்தால் நந்தியம் பெருமானாகி, கயிலையில் இருந்து சிவகணங்களை அடக்கி ஆளும் அதிகாரம் பெற்றார்.

அவரைத்தான் அதிகார நந்தி என அழைக்கின்றனர். கபாலீச்சுவரர் அதிகார நந்தி மீது பங்குனிப் பெருவிழா மூன்றாம் நாள் காலை காட்சி தருகிறார்.

ஐந்தாம் நாள் நள்ளிரவு வெள்ளி விடை மீது கபாலீசுவரர் கண்கொள்ளாக் காட்சி அருளுகிறார்.

தங்க ரிஷபத்தில் வருகிறாள் தாய் கற்பகாம்பிகை!

இறைவன் திருவருள் இல்லாமல் எதுவும் நடைபெற இயலாது. அவனை முன்னிறுத்தியே நாம் எந்தச் செயலையும் செய்ய வேண்டும். அவ்வாறு செய்யப்படாத செயல்கள் பயனற்றுப் போகும்.

#### சந்நியாசி

சந்நியாசி பூரண அகிம்சையை அனுட்டிக்க வேண்டும். அவன் இலையைக் கூட கிள்ளக் கூடாது. அகிம்சை காரணமாக அவனுக்கு அக்னி காரியமே கிடையாது. அக்னி என இருந்துவிட்டால் அதில் பூச்சி ஏதேனும் விழுந்து சாகக்கூடும். நெருப்பிலே விழுந்ததை எடுத்து காப்பாற்ற முடியாது. அதனால்தான் துறவிக்கு ஹோமம், யாகம் எதுவுமில்லை. அவன் அக்னி காரியமே ஏதும் செய்யாததால் அவனுக்கும் கடைசியில் தகனம் எனும் அக்னி காரியம் இல்லை. அவனுடைய சரீரத்தைப் பூமியில் அடக்கம் செய்கிறார்கள். சகல பிராணிகளுக்கும் என்னால் பயமில்லாமல் போகட்டும்' என சந்நியாசம் வாங்கிக் கொள்ளும்போது, அவன் பிரதிக்ஞை செய்கிறான். அதன்படி, எந்தப் பிராணிகளுக்கும். தாவரத்துக்கும் துன்பம் இல்லாமல் 'வாழ வேண்டியது அவனுக்கு விதிக்கப்பட்ட தர்மம்.

- 'ஐயாறு கிருஷ்ணன்'

இந்தத் தத்துவத்தை உணர்த்துவது ஒன்பதாம் நாள் உலா வரும் பிட்சாடனர் திருவிழா.

பங்குனிப் பௌர்ணமி நாளில் இறைவன் அன்னையைத் திருகல்யாணம் செய்து கொள்கிறார். பங்குனி மாதப் பௌர்ணமியன்று பெரும்பாலும் உத்திர நட்சத்திரம் சேர்ந்து வரும்.

கடற்கரை ஊர்களில் பௌர்ணமி நாளே இறைவனுக்கு உகந்தது என்ற ஆகம விதிப்படி மயிலையில் பத்தாம் திருநாள் - திருக்கல்யாணம் நடைபெறும்.

உத்திரம் சற்று முன் பின்னாக வந்தால் மற்ற திருத்தலங்களில் அன்று தான் திருக்கல்யாணப் பெருவிழா. அதாவது பங்குனி உத்திரத்தில் தான் திருமணம்!

### திருஞானசம்பந்தர் கூறும் பயன்

எலும்பு பெண்ணுருவாக வேண்டித் திருஞானசம்பந்தர் பாடியருளிய பதிகத்தின் முதல் பாட்டில் அட்டிட்டல் என்ற சொல் இடம் பெற்றுள்ளது.

மனிதப் பிறவியின் பயன்கள் இரண்டு. இறைவனின் திருவிழாக்களைக் கண்ணாரக் கண்டு மகிழ்தல் ஒன்று. மற்றொன்று இறைவன் அடியார்களுக்குத் திருவமுது செய்வித்தல்.

இவை இரண்டும் 'உண்மையாமெனில் உலகவர் முன் வருக' எனத் திருஞான சம்பந்தர் ஆணையிட்டுரைத்தார்.

காழிப் பிள்ளையாரின் கற்கண்டுப் பதிகத்தைக் கேட்ட கபாலீச்சுவரன் எலும்பைப் பெண்ணாக்கி அருளினான். அட்டிட்டலும் விழாக்காணுதலும் வாழ்வின் பயன்கள் என்பதை உறுதி செய்து விட்டான் இறைவன்.

அட்டு + இட்டல் என்றால் உணவைச்சமைத்து அருந்தக் கொடுத்தல் என்று பொருள்.

சமையற் கூடத்தைத் தமிழிலக்கியங்கள் 'அட்டில்' என்று குறிப்பிடுகின்றன. திருமூலரின் திருமந்திரத்தில் ''அடப்பண்ணி வைத்தார்'' என்று வருகிறது. அடப்பண்ணுதல் என்றாலும் சமைத்தல் என்று தான் பொருள்.

அடியாரைப் பேணுவோர் தமது இல்லத்திலேயே சமைத்து உணவளிக்கலாம். அல்லது வேறு இடங்களில், பொருளையோ, பணத்தையோ கொடுத்து உணவைச் சமைத்து வழங்கச் செய்யலாம். ''அமுது செய்வித்தல்'' என்ற பெரிய புராணச் சொற்றொடர் இதனை உணர்த்துகிறது. அதே பொருளை உணர்த்தும் சொல் தான் 'அட்டிட்டல்' என்பது.

### சம்பந்தர் குறிப்பிடும் மயிலை விழாக்கள்

திருஞான சம்பந்தர் தம் பதிகத்தின் முதற் பாட்டில் அட்டிட்டலைக் குறிப்பிட்டு, அடுத்த ஒன்பது பாடல்களிலும் மயிலைக் கபாலீச்சரத்தில் நடக்கும் திருவிழாக்களைப் பட்டியலிட்டுக் காட்டியுள்ளார்.

'அட்டிட்டல்' என்பதே புரட்டாசி மாதத்தில் நடைபெறும் திருவிழா என்று தருமையாதீனத் தேவாரப்பதிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஐப்பசியில் ஓணம்! இது திருமாலே நடத்தியது.
கார்த்திகையில் விளக்கீடு!
மார்கழியில் ஆதிரை நாள்!
தைமாதத்தில் பூசம்!
மாசியில் கடலாட்டு!
பங்குனியில் உத்திர நாள்!
சித்திரையில் அட்டமி நாள் (தற்காலத்தில் சித்திராபௌர்ணமி). வைகாசியில் பொற்றாப்பு (பொன் + தாம்பு. அதாவது பொன்னூசல்)

ஆனி, ஆடி, ஆவணி ஆகிய மூன்று மாதங்களில் பவித்ரோத்ஸவம். இதனைச் சம்பந்தர் 'பெருஞ்சாந்தி' என்கிறார்.

பெருஞ்சாந்தி என்றால் கும்பாபிஷேகம் என்றும் கூறுவர். ஆண்டு தோறும் குடமுழுக்குச் செய்ய இயலாது. அதற்கீடாகப் பவித்ரோத்ஸவம் நடைபெறுகிறதென 'சோம சம்பு பத்ததி' என்ற நூலை ஆதாரங்கட்டித் தருமையாதீனத் தேவாரப் பதிப்பு தெளிவாக்கியுள்ளது.

ஆக, ஆண்டு முழுவதும் கானமர் சோலைக் கபாலீச்சரத்தில் திருவிழாக்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன,

### அண்மையில் தோன்றிய விழாக்கள்

தொன்று தொட்டு நடைபெற்று வரும் திருக்கோயில் விழாக்களைத் தவிர தற்காலத்தில் ஆங்காங்கு பக்தி மணம் கமழும் பல்வேறு புதிய விழாக்களும் நடைபெறுகின்றன.

திருவையாற்றில் தியாகராஜ ஆராதனை பகுன பஞ்சமி நாளில் நடைபெறும் பொழுது உலகில் பல்வேறு பகுதிகளிலிருந்தும் இசைவாணர்கள் கூடி பக்தியிசையைப் பொழிகின்றனர்.

சீர்காழி மூவர் விழா சீர்காழியிலேயே நடைபெறுகிறது.

திருஞானசம்பந்தர் இசை விழா திருக்கழுக்குன்றத்தில் ஆண்டு தோறும் நடைபெறுகிறது.

அருணகிரி திருப்புகழ் விழா திருவண்ணாமலையிலும் வேறு சில இடங்களிலும் முருக பக்தியைப் பரப்பி வருகின்றன.

சைவ சித்தாந்தப் பெருமன்றம், சேக்கிழார் கழகம் போன்ற அமைப்புகள் அவ்வப்பொழுது மாநாடுகளை நடத்துகின்றன.

அவ்வாறே ஆழ்வார் ஆராய்ச்சி மையம், திருமால் அடியார் குழாம் போன்றவை வைணவ நெறியையும் தமிழ் மொழியையும் வளர்க்கின்றன.

சில ஆண்டுகளாகச் சிதம்பரத்தில் நடைபெற்று வரும் நாட்டியாஞ்சலி விழா நடனக் கலையின் வழியே பக்தியையும் ஒருமைப்பாட்டையும் வளர்க்கின்றன.

திருக்கோவிலூரில் நடைபெறும் கபிலர் விழாவிலும் பக்தி, இலக்கியங்கள் தொடர்பான பட்டிமன்றம் முதலான நிகழ்ச்சிகளின் வழியே வளர்ச்சியடைகின்றன.

ஆங்காங்கே நடைபெறும் ஆலயத் திருவிழாக்கள் பற்றிய செய்திகளை நாளேடுகள் வெளியிடுகின்றன.

அவ்வாறே தூர்தர்ஷன் மற்றும் தனியார் தொலைக்காட்சிகளும் விழாக்களை உடனுக்குடன் ஒளிப்பதிவு செய்து காட்டுவதுடன் சில சமயங்களில் நேரடி ஒளிபரப்பும் செய்கின்றன. இது பாராட்டத்தக்க வரவேற்கத்தக்க பணியாகும்.

### நிறைவுரை

இங்கு முக்கியமான சில விழாக்களைப் பற்றிய சில செய்திகளை மட்டுமே தர இயன்றது.

பல திருவிழாக்கள் பல காரணங்களால் தொடர்ந்து நடைபெறாமல் போய் விட்டன. அவை மீண்டும் நடைபெற அந்தந்தப் பகுதி மக்களும் ஆவன செய்தல் வேண்டும்.

அத்துடன் திருவிழாக்களின் நோக்கத்தையும் பயனையும் உணர்ந்து மகிழ்ச்சியும் மன அமைதியும் பெறுவார்களாக.

# சிவராத்திரி புராணம் கூறும் கதைகள்

- நடராசன் அடிமை

வரதராசக் கவிராயர் என்பவர் ''சிவராத்திரி புராணம்'' என்ற அரிய நூலை இயற்றியுள்ளமை நாம் அறிந்து மகிழத்தக்கது. அவற்றில் உள்ள கதைகள் ஒவ்வொன்றும் அருமையானவை. திருக்கோயில் வழிபாட்டினை வற்புறுத்துபவை. சிவபெருமான் திருவருளைப் போற்றும் அக்கதைகளை நாம் கண்டு பயன்பெறுவோமாக.

நம் நாட்டில் சில தெய்வீகமான பழக்க வழக்கங்கள் உண்டு. விடியற்காலையில் தான் நீராட வேண்டும். இரவில் தண்ணீருக்கு அதி தேவதையான கங்கை தூங்குவதாக நம் முன்னோர் கொள்கை. ஆனால் தீபாவளியன்று மட்டும் பொழுது விடியும் முன்பே நீராடுவதுடன் அத்தகைய நீராடலை கங்கா ஸ்நானம் என்பர்.

அதே முறையில் பகல் வேளைகளில் மட்டும்தான் பூஜைகள் செய்யலாம். காலையில் பத்து மணிக்குள் பூஜை முடிப்பர். நடுநிசிப் பூஜையான அர்த்த ஜாமபூஜையைக் கூட இரவு ஒன்பதுமணிக்குள் நிறைவேற்றி விட வேண்டும் என்பர்.

திருவண்ணாமலையில் இறைவனான சிவபெருமான் பிரமவிஷ்ணுக்களுக்கு அடிமுடி காண முடியாத நிலையில் நின்ற நன்னாளே சிவராத்திரியாகும். அன்று இறைவனை வணங்குவது மிகவும் புண்ணியம் பயக்கும் என்பர் சிவராத்திரிபுராண ஆசிரியர். ''வேதங்களில் சிறந்தது சாம வேதம். வேள்விகளில் சிறந்தது பரிமேதம் என்ற அசுவமேதம். மலைகளில் சிறந்தது மகாமேரு. நதிகளிற் சிறந்தது கங்கை. ஐம்பூதங்களிற் சிறந்தது ஆகாயம். தேவர்களில் சிறந்தவன் இந்திரன். அதுபோல விரதங்களில் சிறந்தது சிவராத்திரி விரதம்.''

மறைகளிற் சாமம்: மகங்களில் புரவிமகம்:<br>
மலைகளில் மகமேரு:<br>
நிறைபுனல் நதியில் கங்கை: ஓரைந்தாய்<br>
நிகழ்ந்த பூதலத்தில் ஆகாயம்<br>
முறைதெரி சுரரில் கருமுகிலூர்தி:<br>
முதன்மை பெற்றுயர்ந்த வாறென்ன<br>
அறைதரு விரதமனைத்திலும் உரைக்கும்<br>
அரன்இரவு அதிகமென்றறிமின்

என்பது சிவராத்திரிபுராணம் அருளிய வரதராச கவிராயர் வாக்கு.

சிந்து நதியின் கரையில் குஞ்சரபுரி என்ற ஊரில் சிவபக்தனான பரபுரஞ்சயன் என்ற அரசன் இருந்தான். அவனுக்கு ஆசி கூறுபவரும் சகல சாத்திர பண்டிதரும், தேவகுருவை ஒத்தவருமான ஒரு அந்தணர் இருந்தார். அவர் மக்கட் பேறில்லாது பல காலம் வருந்தி வாழ, மிக அழகான ஒரு மகன் பிறந்தான். உடலளவில் அவன் அழகு இருந்ததே தவிர குண அழகு என்பதே இல்லாதவனாக வளர்ந்தான். காமமே உருவாக மாறி வாழ்ந்தான். அந்நாட்டில் அவன் தீண்டாத பெண்ணே இல்லை என்ற நிலையேற்பட்டது. தந்தை அவனுக்கு எத்தனையோ புத்தி கூறியும் பயனில்லாது போயிற்று. கோழிக்கு எத்தனை நல் உணவளித்தாலும், அது குப்பைமேடு போன்ற இடங்களில் உள்ள மட்டமானவற்றைத் தானே உண்ணும். அதுபோல அவனுக்குக் கல்விமான்கள் எத்தனை நற்புத்தி கூறியும் அவன் தன் தவறான வாழ்வையே விடாது வாழ்ந்தான்.

கப்பி நாடொறும் கழித்துணவளிப்பினும் கோழி<br>
தப்பிலாது புன்குப்பை போய்க் கிளைத்திடல்<br>
தவிராது<br>
ஒப்பின் நூல் படித்துறுமதியோர் பலகோடி<br>
செப்பினாலும் தன் மனம்புரி செயல்<br>
விடார்தீயோர் - சிவராத்திரி புராணம்.

தத்தம பெண்டிருக்கு இவனால் பரிசுத்தம் குறைவதாகப் பெரியோர் முறையிட சுகுமாரன் என்ற அவ்விளைஞன் அரசனால் நாடுகடத்தப் பட்டான். காட்டில் வந்து பசியால் களைத்துத் துன்புற்ற அவனுக்கு காமம் தான் மேலிட்டது. காட்டிலும் ஏதோ ஒரு பெண்ணைக்கண்டு அவளுடன் வாழ்ந்தான். ஐந்து ஆண் மக்களையும் இரண்டு பெண் மக்களையும் பெற்றான். அவர்களைக் காக்க வழிப்பறி முதலானவற்றில் ஈடுபட்டுப் பல மக்களைக் கொன்றான்.

''காமமே கொலைகட் கெல்லாம் காரணம்.<br>
கண்ணோடாத<br>
காமமே களவுக்கும் காரணம்: கூற்றமஞ்சும்<br>
காமமே கள்ளுண்டற்கும் காரணம் ஆதலாலே<br>
காமமே நரக பூமி காணியாக் கொடுப்பது''

என்ற திருவிளையாடல் வாக்கு இவன் விஷயத்தில் பலித்தது. இவன் பெற்ற ஐந்து ஆண்மக்களும் கொலை, களவு, காமம், கள், குரு நிந்தை ஆகிய ஐந்து பாவங்களையொத்து விளங்கினார்கள். தந்தையும் மக்களுமான பாதகர்கள் கொன்ற சீவன்கள் எத்தகையவை என்பதை விவரமாகக் கூறுகிறார் சிவராத்திரிபுராண ஆசிரியர்.

அந்தணர் எண்ணிலர் : குழக்கன்று : ஆன்,
இடபம் அளவிறந்த
கொந்தவிழ் நாண்மலர்க் கோதைக்
கோதலையர்கள் : குதலைமொழி
மைந்தர்: நரைமுதிர் விருத்தர் : வரும் துறவர்:
வருந்துறக் கொல்
இந்த விதக்கொலைகள் தம்மை யாவர்
கணித்தெடுத்துரைப்பார்.

எண்ண முடியாத வேதியர். பசுக்கன்றுகள்: பசுக்கள், காளைக்கன்றுகள், பெண்கள், குழந்தைகள், துறவிகளைக் கொலை செய்தான். கணக்கேயில்லை. அரசனிடம் பரிசு பெற்று வரும் ஒரு கூட்டத்தாரையே கொன்றான். அவர்களின் பொருள்களைப் பறித்துக் கொள்ள அவர்கள் அரசனிடம் சென்று முறையிட, அரசன் தன் ஆட்களை ஏவி அவனைப் பிடிக்கக் கட்டளையிட்டான். இந்தப்பாதகன் அவர்களிடம் அகப்படாத வண்ணம் எங்கேயோ ஒளிந்து கொண்டான். அவன் தன் மனைவியருக்கு மலர் பறித்துக் கொடுக்க எண்ணி ஒரு காடுவழி வரும்போது **திருநாகேஸ்வரம்** என்னும் ஒரு தலத்தையடைந்தான். அங்கு அந்தணர் வேளாளர் மற்றும் எல்லா மக்களும் ஆண்பெண்கள் யாவரும் நீராடி, திருநீறணிந்து, நல்லாடைகள் அணிந்து திருநாகேச்சுரத்து இறைவனுக்கு நல்ல மலர்கள் கொண்டு பூசனை புரிந்ததைக் கண்டான். அன்று சிவராத்திரித் திருநாள். அது கண்டு தன் இருப்பிடம் திரும்பிய சுகுமாரன் உடல் நலம் குலைந்து உயிரிழக்க, படுபாதகனான அவனை யாமதூதர் பிடித்துச் சென்றனர். வழியிலே சிவபெருமானின் பூதகணங்கள் யமதூதரைத் தடுத்து பாவியான சுகுமாரனை கயிலைக்கு அழைத்துச் சென்றனர். இதைக் கேட்ட யமதருமன் தன் எருமை வாகனமேறி கைலாயம் வந்து ''மாபாவியான சுகுமாரனை நரகத்தில் சேர்க்காமல் தடுக்கலாமா?'' எனச் சிவபெருமானிடம் முறையிட சிவபெருமான் ''எண்ணமுடியாத பாவங்களைச் செய்தவனும், சிவராத்திரியில் எம்மை தரிசித்தால் பாவங்கள் நீங்கிப் பரிசுத்தனாகி விடுவான். இவன் சிவராத்திரியன்று நான் அம்மையுடன் மகிழ்ந்து வசிக்கும் திருநாகேச்சுரத்தில் தரிசித்ததனால் அவனது மலைபோன்ற பாவங்கள் அகன்றன. இவன் சிவகணங்களில் ஒருவனாகி முத்தி பெற்றான்'' என்று கூறியருளினார்.

## திருத்தேர் வடம் பிடித்தால் வைகுந்தத்தில் இடம் பிடிக்கலாம்

ஒன்றும் அறியாத ஊமர்காள் தென்னரங்கர்
இன்று திருத்தேரில் ஏறினார் நின்று
வடம்பிடிக்க வாருங்கள் வைகுந்த நாட்டில்
இடம்படிக்க வேண்டும் எனின்.

அன்னசிவநிசிவிரதத்து ஆசு அகல் நாகேச்சுரத்தில்
அமுதமூறும்
கன்னல்மொழி உமையோடு எமைக் கண்டிடப்
பெற்றனன்: அதனால் காயும்
வெய்யோன்
முன்னர் எதிர் இருள் இமம் போல் உடைந்தகன்ற :
இவன்முதல் நாள் முயின்ற பாவம்
என்னரு நற்கணங்களுடன் கூடுகின்ற
இன்பமுத்திஈது பெற்றான்

''சிவராத்திரியன்று தரிசித்த புண்ணியத்தால் பாவம் நீங்கி நற்பதம் பெற்றான்'' என்று சிவபெருமான் கூற யமதருமன் விடை பெற்றுச் சென்றான். **சிவராத்திரிபுராணம சுகுமாரச்சருக்கம்** இவ்வாறு கூறுகிறது.

மேற்படி வரலாறு சிவபெருமானை வணங்குபவரை யமனே வணங்குவான்

ஆடகச் செம் பொன் அணிமன்று இடங்கொண்ட
பாடகச் சீரடியாள் பாகத்தான் - சூடகக்கைக்
கங்கையாள் கேள்வன் கழல்தொழூஉ கைகூப்பி
நின்றிறைஞ்ச சென்றிறைஞ்சும் கூற்று.

என்று குமரகுருபரர் கூறும் வாக்கை மெய்ப்பிக்கிறது.

★ ★ ★

சாகரபுரம் என்ற ஓர் ஊரின் அருகில் சூரியனது ஒளி நுழையாது எப்போதும் இருள் நிறைந்து, மரங்களடர்ந்த காடு ஒன்று உண்டு. அங்கு

அங்குலன் என்று பெயருள்ள வேடனொருவன் தன் மனைவியுடனும் இரு குழந்தைகளுடனும் வசித்தான். ஒரு நாள் வேட்டையாடக் காடுபுகுந்தான். பல இடங்களில் வலைகளை விரித்து வைத்தும், வில்லம்புகளோடு காட்டில் திரிந்தும் அன்று எந்த மிருகமும் கிடைக்கவில்லை. பசிதாகம் களைப்பு மேலிட்டு இதே போல் தன் மனைவி மக்களும் வருந்துவாரே எனக் கவலையுற்றான். சூரியனும் மறைந்தான். இருள் நிறைந்த காட்டில் மேலும் இருள் சூழ்ந்தது. வீடுதிரும்பினால் வெறுங்கையுடன் சென்று குழந்தைகள் மனைவி மக்களுக்கு உணவு கொடுக்க இயலாதே என வேதனையுற்றான்.

பாவியேன் வாளா வெறுங்கையோடு எய்தில்
பயனிலை: பனிஇருள் பொழுதில்
வாவிகள் துருவிகுளிர் புனல் பருக
வருமிருகங்களுக்கு அயில் அம்பு
ஏவியே வதைத்து அடிகொடுபோதல் இயல்பு
என மதித்துடனெழுந்து
தூவியஞ் சிறைப் புட்குலம்பயின்றிடுமோர்
சூழியின் கரைகணுற்றனனே.

''வெறுங்கையுடன் வீடு செல்வதில் பயன் இல்லை. இருள் நிறைந்த இவ்விரவு நேரத்தில் தண்ணீர் குடிக்க வரும் விலங்குகளில் சிலவற்றை அம்பு செலுத்தி எடுத்துச் செல்லலாம் என எண்ணி ஒரு பெரிய வில்வமரத்தில் ஏறி அமர்ந்து மறைந்த நிலையில் ஒரு குளக்கரையை நோக்கிய வண்ணம் இருந்தான். அவன் ஏறி அமர்ந்திருந்த மரத்தினடியில் சிவலிங்கம் இருந்ததை அவன் அறியவில்லை. அன்று சிவராத்திரி நாள். அந்த வேடன் மரமீது இருந்து கொண்டு, உறங்காமலிருப்பதற்காக வில்வமரத்திலிருந்து ஒவ்வொரு இலையாகப் பறித்துக் கீழே போட அது மரத்தின் கீழிருந்த சிவலிங்கப் பெருமான் மீது விழுந்தது. தன்னையறியாது, நித்திரை செய்யாமல் வில்வ இலைகளை சிவபெருமான் திருமுடியில் சிவராத்திரியன்று இட்டதால் அவன் சிவபெருமானுடைய அருளால் நற்கதி பெற்றான். சிவராத்திரியன்று பெரியோர்கள் முறைப்படி செய்யும் பூஜையின் பலனைப் பெற்றான்.

குறுந்துளித்திவலைப் பனிநனி மூழ்கி:
கொடும்பசிக்கு அருந்திடா தொழிந்து
ஊண்உறுந்துயில் துறந்து புராரிசன்னிதியில்
ஊறில் மாலுற வெண்தழையால்
தெறுந்தழல் நுதற்கண் சிவநிசியதனில்
சிவார்ச்சனை புரிந்து வெந்தீமை
அருந்தவமுடையோர் ஒத்தனன் வேடன்''

என்கிறது சிவராத்திரி புராணம்.

இச்சாசக்தி, கிரியாசக்தி, ஞானசக்தி ஆகிய மூன்று இதழ்களுடன் கூடிய வில்வ மரத்தினையடைந்து மூன்று நாட்கள் ஊண் உறக்கம் முதலானவை விட்டு'' அரஹர'' எனச் சிவநாமம் முழங்கி வணங்குபவர் பாவம் தீரும் என்பர் திருவிளையாடற் புராணமுடையார்.

புரகரன் இச்சா ஞானக்கிரியையாய்ப்
போந்த வில்வம்
மரமுதல் அடைந்து மூன்று வைகல் ஊண்
உறக்கமின்றி
அரகர முழக்கம் செய்வோர் ஐம்
பெரும்பாதகங்கள்
விரகில் செய் கொலைகள் தீரும் ஆதலால்
விசேடம் வில்வம்.

இத்தகைய வில்வம் கொண்டு சிவராத்திரி அன்று தன்னை அறியாமல் பட்டினி, தூக்கமின்றி வில்வத்தை இறைவன் மீதிட்ட அங்குளன் நற்கதியடைந்ததில் வியப்பே இல்லை.

(தொடரும்)

★★★

## மூன்றுவகை குணங்கள்

இராஜஸம், தாமஸம், சத்துவம் என குணங்கள் மூன்று வகைப்படும்.

பொறாமை, கோபம், ஆடம்பரம், டம்பம் முதலியவை ராஜஸம்.

தூக்கம், மயக்கம், சோம்பல் முதலியவை தாமஸம்.

அன்பு, அடக்கம், பொறுமை, கருணை, சாந்தம் முதலியவை சத்துவ குணமாகும்.

# கம்பரின் இராமாவதாரம்

- கம்பன் கவிநயமணி வே. தியாகராஜன்

முத்தமிழ்க் கவிஞனான கம்பன் தந்த முழுச் சுவையமுது இராமகாதை. கம்பர் பெருமானின் காவியத்தை முறையாகக் கற்றோமானால் தமிழில் உள்ள எல்லா நூல்களையும் படிக்கவும் பிறருக்கு எடுத்துக் கூறவும் பேராற்றல் வந்துவிடும் என்பது பெரியோர்கள் கண்ட பேரானந்த அனுபவம். தமிழான பாற்கடலிலே கம்பன் தமது நாவான மலையை நாட்டிக் கடைந்து உலகத்தவருக்கு அளித்த அமுதமே இராமகாதை.

கம்பனது குலதெய்வம் நரசிம்ம மூர்த்தி. குலதெய்வத்தின் பெயரிட்டுக் குழந்தைகள் வளர்ப்பது நம் முன்னோர் நமக்குக் காட்டியவழி. கம்பத்திலிருந்து தோன்றிய கடவுளைக் கம்பன் எனக்குறித்தனர். கம்பனுக்கு அவனது முன்னோர்களால் அவ்வாறே பெயரிடப்பட்டது. தமது குல தெய்வமான நரசிம்ம மூர்த்தியின் அவதாரக் கதையைப் பாடிய கம்பன், தான் எழுதிய ராமகாதையில் வீடணன் இராவணனுக்கு நல்லுரை கூறிய போது இரணியன் கதையையும் கூறினான்; ஒரு கிளைக்கதையாக ''இரணியன் வதைப்படலம்'' என அமைத்துப் பாடினான். கம்பன் திருவரங்கம் கோயிலிலே தன் காவியத்தை அரங்கேற்றும்போது **நகை திறந்து அண்டங்கிறிச் சிரித்தது செங்கட்சியம் என** நரசிம்மப் பெருமான் தோன்றிய பெருமை கூற, **நரசிம்ம மூர்த்தி** சிரித்து ஆரவாரம் செய்து கம்பனுக்கு அருள்புரிந்தார் என்பது வரலாறு.

கம்பனின் குலதெய்வம் **நரசிம்மமூர்த்தி**. தன் இஷ்ட தேவதையாக **இராம பிரானைக்** கொண்டார். இதயத்திலே இராமனை இருத்தி, அழகிய சிங்கர் திருக்கோயிலில் எழுந்தருளியிருந்த **நரசிம்மர் திருக்கோயிலின் அருகாமையில், காளி** தேவி நெய்ப்பந்தம் பிடிக்க **கலைமகள்** ஒரு கன்னியுருவில் எழுந்தருளியிருக்க ஒரு இரவுக்கு 700 பாடல்கள் பாடினான் என்பது வரலாறு. ஒரு நாள் வெகுநேரமாகிவிட, எதிரிலிருந்த கலைமகள் **''பொழுது விடிந்தது கம்பா!** எனக்கூற, நம் கவிஞர் பெருமான் **எழுதி முடிந்தது அம்மா!** என விடை கூறினான் என்பர்.

கம்பனது காவியம் ஒரு கற்கண்டு மலை. எந்த இடத்தைச் சுவைத்தாலும் இனிக்கும். இராம பிரானை எண்ணும்போதே பாற்கடலில் பள்ளி கொண்ட பரந்தாமனே இராமனாக வந்தார் என எண்ணி முதல் அவையடக்கத்திலேயே பாற்கடலைப் பற்றிப் பேச ஆரம்பித்தார். அலையடிக்கும் பாற்கடலின் ஓரத்தில் நிற்கும் அத்தனை பாலையும் **நக்கிக்குடித்து விட விரும்பிய பூனை போல நிற்கிறேன்** எனப் பாற்கடலைப்பற்றிய குறிப்புடனே ஆரம்பிக்கிறது காவியம். வான்மீகரைக் கவிதா சிம்மாசனத்தில் ஏற்றி வைத்து **''அவரது வாக்கு வீணையின் நாதம் போன்றது''** என அவையடக்கம் கூறி குருவருளால் குருவையும் மீறிய அழகுடன் காவியம் படைத்தார் கவிச்சக்கரவர்த்தி.

நாட்டிற்குச் செல்வமும் செழுமையும் தருவது ஆறு. அதனால் நம் நாட்டில் பாரகாவியம் பாடும் புலவர்கள் ஆற்றின் ஓட்டத்தையும் அழகையும் பாடிப் பின் நாட்டுவளம் நகர்வளம் பாடுவது மரபு.

கம்பன் எல்லா தெய்வங்களையும் மதிப்பவன் என்பதால் ''உலகங்களைப் படைத்து, காத்து, அழிப்பதைத் திருவிளையாடலாகச் செய்யும் தெய்வத்தை வணங்குவோம்.'' எனப் பாடியுள்ளான்.

உலகம் யாவையும் தாம் உள வாக்கலும்
நிலை பெறுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகிலா விளையாட்டுடையார் அவர்
தலைவர் அன்னவர்க்கே சரண் நாங்களே

என்ற முதற் பாடலிலிருந்து அவரது சமய சமரச உணர்வு விளங்குகிறது. சரயு நதியின் வர்ணனையும் ''திரு நீறணிந்த சிவபெருமானைப் போலக் கிளம்பிய வெள்ளை மேகம், கடல் நீரைக்குடித்து, கரிய திருமாலைப்போல் கரு மேகமாக வந்து மழை பொழிந்தது'' என்கிறார்.

நீறணிந்த கடவுள் நிறத்த வான்
ஆறணிந்து சென்று ஆர்கலி மேய்ந்து அகில்
சேறணிந்த முலைத் திருமங்கை தன்
நீறணிந்தவன் மேனியின் மீண்டவே.

கலைமகளான சரசுவதி மாதிரிக் கிளம்பிய வெள்ளைமேகம் கடல்நீர் முதலானவற்றைக் குடித்துக் கரியநிறங்கொண்டு நீலத்திருமேனியான திருமாலின் தங்கையான பார்வதி தேவி மாதிரி கருநிறங்கொண்டது என்பர் நைடத ஆசிரியரான அதிவீரராம

பாண்டியர். பால்கடல் கடையும் முன் சிவபெருமான் திருமால் இருவரும் வெள்ளை நிறமுடையவராயிருந்தனர். பாற்கடல் கடைந்த காலத்து ஆலகால விடம் பொங்கிவர, முன்னால் நின்ற திருமாலின் மீது பட அவர் நீல நிறமானார். அத்தகைய நஞ்சை சிவபெருமான் உலகத்தைக் காக்கும் பொருட்டு தன் வாயிலிட்டுக் கழுத்தில் நிறுத்திக் கொண்டு நீலகண்டர் எனப் பெயர் பெற்றார். இந்த வரலாற்றை நினைவு கூர்ந்த காஞ்சிபுராணமுடையார் பாற்கடல் கடையுமுன்னிருந்த வெண்ணிறமுடைய திருமால் மாதிரி கிளம்பிய மேகம். பாற்கடல் கடைந்த பின் கரிய திருமேனி கொண்ட திருமால் மாதிரியாக கரியமேகமாகி வந்தது என்றார்.

குழந்தை பிறக்கும் வரை அன்னையின் மடியில் பால் இல்லை. குழந்தை பிறந்தபின் அன்னையின் மடி சுரக்கிறது. குழந்தை அன்னையிடம் அமுதம் உண்டு சிறிது வளர்ந்த பின் அன்னையின் மடி வற்றி விடுகிறது. அதே மாதிரி நாட்டுமக்களுக்கு வேண்டும் போது தண்ணீரையளித்து வேண்டாத போது வற்றிக்காட்டிய சரயுநதியை **சரயுவன்னது தாய் முலையன்னது** என்றார்.

ஆகாயத்திலிருந்து கீழே வந்த கங்கையை, நிலத்தில் விழுந்தவுடன் பகீரதனுக்காக இறங்கி வந்த பாகிரதி என்பர். யமுனை சரசுவதி முதலான நதிகள் கலந்ததும் திரிவேணி என்றனர். கல்கத்தாவில் கடலில் கடக்கும் போது ஹூக்ளி என அழைத்தனர். ஆனால் அந்நதியைப் பொதுவாக கங்கை என்றே அழைக்கின்றனர்.

அதே போல் சரயுநதி மலையிலிருந்து புறப்பட்டுச் சமவெளியில் இறங்கிப் பல கால்வாய்களாகப் பிரிந்து ஒன்றாகச் சேர்ந்து கடைசியில் கடலில் கலந்தது. இறைவன் என்ற தத்துவம் பலவிதமான சித்தாந்தங்களான பாத்திரங்களில் விழ ஒவ்வொருவரும் ராம் ரகீம் கிருஷ்ணன் கிறிஸ்து என அழைப்பர். அந்த நிலையில் சரயும் ஒன்றாகக் கிளம்பிப் பல கிளைகளாகப் பிரிந்து வந்து கடலில் கலந்தது.

கல்லிடைப் பிறந்து போந்து கடலிடைக்
கலந்த நீத்தம்
எல்லையில் மறைகளாலும் இயம்பரும்
பொருள் ஈதென்னத்
தொல்லையில் ஒன்றேயாகித் துறைதொறும்
பரந்த சூழ்ச்சி
பல்பெரும் சமயம் சொல்லும் பொருளும்
போல் பரந்ததன்றே.

எல்லா தெய்வங்களை நினைத்துச் செய்யும் வழிபாடுகளும் கேசவனான திருமாலையே அடைகின்றன என சந்தியாவந்தனமந்திரம் பேசுகிறது. எந்த தெய்வத்தை எண்ணி வணங்கினாலும் அது அம்மையப்பனான சிவபெருமானையடையும் என்பது சைவம். பிறமதங்களை இந்து மதத்தவர் இகழ்வதில்லை. எல்லாமதத்தையும் மதிக்கும் மதம் இந்து மதம். இத்தகைய சமரச மனோபாவம் யாவருக்கும் இருந்து விட்டால் உலகில் மதவெறியே கிடையாது. ஆண்டவன் அருள்க!

அத்தகைய சரயு நதியின் கரையிலுள்ள கோசல தேசத்தைப் பற்றிக் கூற வந்த கம்பனுக்கு முதல் நூல் முனிவராகிய வான்மீகரின் நினைவு வந்துவிட்டது. கம்பன் வடமொழி தமிழ் மொழி இரண்டும் அறிந்தவன். கம்பனது தெய்வமான இராமபிரானை **தென் சொற்கடந்தான் வடசொற்கு எல்லை தேர்ந்தான்** எனக் கம்பனே கூறியுள்ளான். சமீபகாலப்புலவர் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையவர்கள் கம்பனை **''ஆரியம் நன்குணர்ந்தோன், தமிழின் ஆழம் அளந்து கண்டோன்''** என்றார்.

''நாலு அடிகளோடு கூடிய வான்மீகரின் வடமொழிப் பாக்களில் ஒரு அடியில் ஒரு எழுத்தை மாற்றி வேறொரு எழுத்தை வைக்க முடியாது'' என்று கூறும் கம்பன் தனது காவியத்தைப் பிறர் தொட்டுத் திருத்தும்படியாகச் செய்திருக்க மாட்டான் என்பது குறிப்பு. அத்தகைய வான்மீகரால் புகழப்பட்ட நாட்டை அடியேன் புகழ்வது ஊமையன் கள்ளைக்குடித்துவிட்டுப் பேசுவது போலாகும் என அவையடக்கம் போல் பாடுகிறான். எனக்குப் பேச வராத ஊமை போன்ற நிலையில் ஏற்கனவே எனக்குள்ளே தமிழ் என்ற தேனிருந்தது. வான்மீகியின் கவிதையான தேனையும் பருகி மிதமிஞ்சிய களிப்பில் பாடலானேன் என்றார்

வாங்கரும் பாதநான்கும் வகுத்தவான்மீகி
என்பான்
தீங்கவி செவிகளாரத்தேவரும் பருகச் செய்தான்
ஆங்கவன் புகழ்ந்த நாட்டை அன்பெனும்
நறவமாந்தி
மூங்கையான் பேசலுற்றான் என்ன யான்
மொழியலுற்றேன்.

பரமவைணவனான கம்பன் திருவரங்கப் பெருமானின் கட்டளையால் நம்மாழ்வார் மீது சடகோபரந்தாதி என்ற நூலைப்பாடினான். இராமகாதையை ஆரம்பிக்கும்போது **''குருகை நாதன் குறை கழல்காப்பதே''**, என குருவணக்கமாக நம்

## உயிர் நீங்கும்போது வலியின்றிக் காத்தல் வேண்டும்

ஒரு துறவி தோப்புக்குச் செல்லும் வழியில் ஒரு வேலமுள் அவர் காலில் குத்தி விட்டது. முள்ளைப் பலமாக இழுத்தபோது, இரத்தம் பீறிட்டுப் பாய்ந்தது.

''காலில் குத்திய முள்ளை எடுக்கும்போதே இவ்வளவு வலிக்கிறதே! என் உடலில் ஊடாடி நிற்கும் உயிரைக் காலன் எடுத்தால் எவ்வளவு வலிக்கும்?'' என்று நினைத்த துறவி ''இறைவா! அவ்வேளையில் வலியின்றி உயிர் நீங்க அருள் செய்'' என வேண்டிக் கொண்டார்.

மாழ்வாரைப் பாடினான். நம்மாழ்வார் பிறந்ததி லிருந்து அழாமல், பால் குடிக்காமல் ஊமை போன் றிருந்தார். இதை நினைவில் கொண்ட கம்பன் (ஊமையான) மூங்கையான நம்மாழ்வார் என் இத யத்திலிருந்து பேசுகிறார். அதையே நான் மொழி கிறேன் என ராமகாதை பாடியதற்கு குருவருளே துணை எனக் கூறுவது போல் **நானுரைக்கும் வார்த்தையெல்லாம் நாயகன் தன் வார்த்தை** என இராமலிங்க சுவமிகள் கூறியது போல் தன் காவியத்தை நம்மாழ்வார் தமது இதயத்திலிருந்து பாடியதாகக் கம்பன் கூறியதாகப் பொருள் கண்டார் என் ஆசிரியர் பிரானான திரு N.R. கிருஷ்ண சுவாமி ஐயங்கார் அவர்கள்.

ஒரு அழகிய காட்சி. தாமரைக்குளத்தி லிருந்த அன்னபட்சி தன் குஞ்சை ஒரு தாமரை யில் கண் வளரவிட்டது. அவ்விடத்திற்குத் தண் ணீர்குடிக்க ஒரு எருமை வந்தது. தண்ணீர் குடித்த எருமையின் மார்பில் தற்செயலாக துள்ளியமீன் ஒன்று பட்டது. தன் மார்பை எவரோ தீண்டிய உணர்ச்சி பெற்ற எருமை தன் கன்றை நினைத்துக் கொண்டு அதனுடைய மடிசுரந்து பால் சொரிய, அந்தப்பால் தற்செயலாகத் தாமரையில் படுத்திருந்த அன்னக் குஞ்சின் வாயில் விழ, சொகுசான தாமரைத் தொட் டிலில் படுத்திருந்த அன்னக்குஞ்சு எருமைப்பாலை அருந்தியபோது, தவளைகள் சப்தமிட அந்தக் குர லைத் தாலாட்டாக எண்ணி அன்னபட்சி அயர்ந்து தூங்கலாயிற்று.

நாடாள வேண்டிய நல்ல தினத்திலே தன் அரசைத் தம்பிக்கு அளித்துக் காடுபுகப்போகும் தியாகமூர்த்தியான இராமபிரானின் கோசல தேசத் தில் தன் குழந்தைக்கு அளிக்கவேண்டிய ஆகாரத்தை அன்னத்திற்கு அளித்தது எருமை எனக் கூறியதன் மூலம் கோசலதேசத்துப் பிராணிகள் கூடத்தியாக மனப் பான்மை உடையவை எனக் காட்டினார் கம்பர். அத்தகைய பாடல் வருமாறு.

சேலுண்ட ஒண்கணாரிற் திரிகின்ற
செங்காலன்னம்
மாலுண்ட நளினப்பள்ளி வளர்த்திய
மழலைப்பிள்ளை
காலுண்ட சேற்று மேதி கன்றுள்ளிக்கனைப்பச்
சோர்ந்து
பாலுண்டு துயிலப்பச்சைத் தேரை தாராட்டும்
பண்ணை.

மனிதர்கள் செய்யும் பாவங்கள் காரணமாக சிறிய வயது மக்கள் மரணமடைவர். ஆனால் கோசல நாட்டில் அத்தகைய குற்றங்களில்லாத படியால் கூற்றுவனான யமன் வரவில்லை. யாவரும் நேர்மை யாக நடந்து கொண்டபடியால் சினமெனும் சீற் றத்திற்கு இடமில்லை. அந்த நாட்டிலே தருமத்தையே காண முடியவில்லை. அதர்மம் ஒன்று இருந்தால் தான் தருமத்தைக் காண முடியவில்லை. அங்கு உயர்வு தாழ்வே இல்லை எனக் கம்பன் பாடும் பாடல் பின் வருமாறு:

கூற்றமில்லை ஓர் குற்ற மில்லாமையால்
சீற்றமில்லை தம் சிந்தையிற் செய்கையால்
ஆற்ற நல்லறம் அல்லதில்லாமையால்
ஏற்றமல்லது இழிதகவில்லையே.

அது மட்டுமல்ல. கள்வர்கள் இல்லாததால் காவலர் கள் இல்லை. வறுமையில்லாததால் வள்ளல்கள் இல்லை. கொள்பவர் இல்லாததால் கொடுப்பவரு மில்லை என்றெல்லாம் கூறி அந்நாட்டின் தலைநக ரான அயோத்தியைச் சிறப்பிக்கின்றான் கவிஞன். புண்ணியம் செய்தவர் இறைவனது வைகுண்டத்தை யடைவர் என்று வேதம் கூறுகிறது. அத்தகைய வைகுண்டத்தின் தலைவனே அங்கிருந்து இறங்கி அயோத்தியைத் தலைநகராக் கொண்டு அரசாளப் போகின்றான் என்றால் அது மேலுலகத்தைக் காட் டிலும் சிறப்புடைய தன்றோ? அயோத்தியைச் சுற்றி யுள்ள மதிற் சுவரைக் கூறவந்த கவிஞன் பெரியோர் களால் கூறப்பட்ட நீதிநூல்களை அறிந்து அவ்வழி ஒழுகிவாழும் நல் பொருளான குணக்குன்றுகள் போல் உயர்ந்துள்ளன என்கிறான். **குணங்களால் உயர்ந்த வள்ளல் என அழைக்கப்படப்போகும் இராமபிரானுடைய கோசலம் ஒழுக்கம் நற்குணம் ஈகை வீரம் சாந்தம் போன்ற நல்லன எல்லாம்**

நிரம்பிய நாடு என்பது குறிப்பு. அந்நாட்டு மக்கள் இசை, சித்திரக்கலை, தெய்வபக்தி முதலான நற்குணங்கள் நிறைந்தவர்கள் என்றெல்லாம் கூறி அந்நாட்டு மக்கள் **''வருந்தி வந்தவர்க்கு ஈதலும் வைகலும் விருந்துமன்றி விளைவன யாவையே''** என்கிறான். இது **''வண்மையில்லை ஓர் வறுமையின்மையால்''** என்பதற்கு முரண்படுகின்றதல்லவா? சிறுகுழந்தைகளுக்குப் பயிற்றும் நீதி நூலில் கூட **''ஏற்பது இகழ்ச்சி''** எனக்கூறி **''ஐயம் இட்டுண்''** என்பது முரண்பாடுதானே. ஆண்டாள் அம்மையார்தமது திருப்பாவையில் **''ஐயமும் பிச்சையும் ஆந்தனையும் கைகாட்டி''** என்றார். ஏற்பது, பிச்சை என்பது மானத்தை விட்டுப்பிறரிடம் கைகட்டி நிற்றல். அத்தகைய பிச்சை கேட்போர் இராமபிரானின் கோசல தேசத்தில் இல்லையாம். சான்றோர்களை அழைத்து, வணங்கி உபசரிப்பது ஐயம் என்பர். வந்தவர்கள் வருந்தவில்லை. வநதவர்களைக் கட்டாயப்படுத்தி உணவு கொடுப்பர் எனக் கொள்ள வேணும். **வந்தவர்க்கு வருந்தி ஈந்தார்** எனக் கொள்ள வேணும். திருவிளையாடற் புராணத்தில் விருந்தாளிகளை வழிமறித்து உண்ணுமாறு கூறுவர் என்கிறார் பரஞ்சோதி.

நறைபடு கனிதேன் பெய்த பாலொடு நறு
நெய் வெள்ளம்
நிறைபடு செம்பொன்வண்ணப்
புழுக்கலாநிமிர்ந்த சோறு
குறைவற உண்டு வேண்டும் பொருள்களும்
கொண்மின் என்ன
மறைமுதல் அடியார் தம்மை வழிமறித்து
அருத்துவார்கள்.

வழிமறித்து வழிப்பறி செய்யும் கலியுகத்தில், வழி மறித்து உபசரிப்பது புதுமையன்றோ! வெறுப்பு, களவு முதலானவைகளை நீக்கி குணக்குன்றான இராமபிரானின் கதையை நன்கறிந்து **''வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்''** என்று வள்ளலார் காட்டிய வழியில் நடந்து நம் நாட்டை பூலோக சுவர்க்கமாக்க இறைவனை வேண்டுவோமாக. ஜெய சீதாராமன் துணை.

*(தொடரும்)*

★★★

# வாசகர் எண்ணங்கள்

அழகு தமிழில் அருள்மிகு உமையம்மை 108 போற்றி படிக்கப் படிக்க திகட்டாத தேவாமிர்தமாக இனித்தது. தெய்வத் தமிழ் போற்றிகளைத் தொகுத்து வழங்கும் தங்கள் துறைக்கு நன்றி சொல்ல வார்த்தைகளே இல்லை.

**- அ. பூங்குன்றன், சென்னை - 600 015.**

குழந்தை பாக்கியம் வழங்கும் அன்னை கர்ப்பரட்சாம்பிகையின் திருவருள் சிறப்பினைத் திருக்கோயில் வாயிலாகப் படித்துப் பெருமகிழ்வு கொண்டேன். ''மகப்பேறு அளிக்கும் மகோன்னத லிங்கம்'' கட்டுரையும் சிறப்பாக இருந்தது.

**- சு. முத்துலட்சுமி, வேலூர்.**

கணவரை விட்டு அகலாத வரம் தரும் ''காரடையான் நோன்பு'' பற்றிய திருமதி மீனாட்சி கோகுலவாசன் கட்டுரை அருமை. ''நோன்பு'' முறைகளை அறிய உதவிய ஆசிரியருக்கு நன்றி.

**- லட்சுமியம்மாள், கே.கே. நகர், சென்னை - 600 083.**

தெய்வங்கள் மதித்த தெய்வீக மொழி தமிழ் என்பதையும், தமிழமுதம் பருக விழைவார் குமர குருபரர் அருளியுள்ள பிரபந்தத் திரட்டுகளைப் பயிலுதல் வேண்டும் என்பதையும் ''மகாகவி பிள்ளையவர்கள் அளித்துள்ள மாவிருந்து'' கட்டுரை தெளிவு படுத்தியது.

**- பா. கொளஞ்சி, சின்ன சேலம்**

ஆணவநிலை அற்ற அடியவர்களுக்கு முருகப் பெருமான் எளிவந்த எளியன் என்பதை ''வள்ளிச் சன்மார்க்கம்'' கட்டுரை வாயிலாகப் படித்துப் பேரானந்தம் உற்றேன்.

**- இராஜாராமன், மழபாடி.**

# கம்பன் கண்ட பரதன்

- முனைவர் இரா. செல்வகணபதி, மயிலாடுதுறை

(முன்தொடர்ச்சி)

ஆவேசம் கொண்ட இலக்குவனைச் சாந்தப் படுத்தும் இராமன்

'நதியின் பிழை அன்று நறும்புனல் இன்மை:
அற்றே
பதியின் பிழை அன்று : பயந்து நம்மைப் புரந்தாள்
மதியின் பிழை அன்று : மகன் பிழை அன்று :
மைந்த!
விதியின் பிழை : நீ இதற்கு என்னை வெகுண்டது?

என்று கூறுகின்றான்.'

காரண காரியங்களுக்கு உட்படாத நிகழ்வுகளை, விதியின் மேல் ஏற்றிக் கூறுவது கவி மரபு. கைகேயி கேட்ட வரத்தால் தான், தான் காடேகும் நிலை வந்துற்றது என்று இராமன் அறிந்திருந்தும், பழியை அவள் மேல் சுமத்தாது, விதியின் மேல் சுமத்துகின்றான். தன்னை, அன்பு காட்டி வளர்த்த தாயைப் பழியுரைக்க விரும்பாத நன்மனம், அவள் மன மாற்றத்துக்கு காரணமாக விதியை முன்னிலைப் படுத்திச், சமாதானம் காண்கிறது. 'மகன் பிழை அன்று' என்பதன் மூலம், பரதன் குற்றமற்றவன் என்பதை, இராமன் உறுதி செய்கிறான். இராமனின் இக்கூற்றை இலக்குவன் ஏற்க மறுக்கிறான்.

'விதிக்கு விதியாகும் என் விற்றொழில் காண்டி'

என்று, மேலும் சீற்றம் கொள்கிறான். 'இலக்குவா! என் சொற்களை ஏற்றுப் போற்றினால், உனக்கு என்ன தாழ்வு வரும்? நின் சினம் தணிக!' என இராமன் கூறவும் இலக்குவன் சீற்றம் தணிகிறான்.

இலக்குவனின் சீற்றம் பற்றி ஒன்றும் அறியாத பரதன், இராமனைத் தேடி அவன் இருப்பிடம் செல்கிறான். கங்கைக் கரையில் இராமன் தங்கியிருந்த இடம் எது எனக் கேட்டு அறிந்த பரதன், இலக்குவனின் தொண்டு பற்றி வினவுகின்றான். குகன், விடை தருகிறான். அவன் தூய தொண்டு உணர்ந்த பரதன், இலக்குவனோடு தன்னை ஒப்பிட்டுப் பார்த்து மனம் மாழ்குகின்றான். பரதனின் உயர் நெஞ்சம், நம்மை ஈர்க்கிறது.

- 'இராமனுக்கு இளையார் என்று
முன்பு ஒத்த தோற்றத் தோமில்
யான் என்றும் முடிவு இலாத
துன்பத்துக்கு ஏது ஆனேன் .
அவன் அது துடைக்க நின்றான்
அன்பத்துக்கு எல்லை உண்டோ
அழகிது என் அடிமை.'

பரதனின் சொற்களில், தம்பி இலக்குவனைப் போற்றும் உயர்பண்பு மிளிர்வதைக் காண்கிறோம்.

தற்காலிகமாக, இராமன் உரையில் கோபம் தணிந்தான் இலக்குவன், ஆயினும், பரதன் மேல் அவன் கொண்ட ஐயம் தீர்ந்திலது. கங்கை கடந்து, தன் சேனையுடன் பரதன், இராமனை நாடி வருதலைத் தூரத்தே கண்ட இலக்குவன், மீண்டும் சினக்கிறான். போர்க்கோலம் பூண்டு, வீர உரை பேசுகின்றான். இராமன், அவன் சினம் தணியுமாறு அறிவுரை கூறுகின்றான் 'நம் குலத்து உதித்தவர் எவரும், தருமநெறி நீங்குதல் உண்டோ' உலகில் எத்தனை வேதங்கள் உண்டோ, அவை அனைத்தும் இயம்பும் நல்லறங்கள் யாவும், ஒரு சேரப் பெற்ற தருமச் செய்கைகள் உடையவன் பரதன். என் மேல் கொண்ட அன்பு நெஞ்சத்தால், நீ அவனை ஐயுறல் தகாது. அவன் என் மீது கொண்ட அன்பால், என்னைக் காணவும், நாட்டை என்னிடம் வழங்கவுமே வருகின்றான்.'

'சேண்உயர் தருமத்தின் தேவை, செம்மையின்
ஆணியை அன்னது நினைக்கல் ஆகுமோ?

என்று, பரதன் பெருமை பேசி நிறைகிறான் இராமன். பரதனைத் தருமதேவதை எனவும், செம்மையின் உரையாணி என்றும் மதிப்பிட்டுரைக்கிறான்.

தவக்கோலத்தில் பரதன் நெருங்கி வரக் கண்டு, இராமன், இலக்குவனைக் கேலி பேசுகின்றான். பரதனின் போர்க்கோலம் பார்த்தாயா என்று, அவன் தவக்கோலம் காட்டுகின்றான். அவன் கோலம் கண்ட, அடுத்த வினாடியே இலக்குவன் சினம் அழிந்தொழிகிறது. கண்களில் நீர் பெருக நிற்கிறான். பரதன் குற்றமற்றவன் என்று, இலக்குவன் தேர்கிறான். அவன் உரையாடவும் இல்லை. செயலும் அறிந்திலன். காட்சி மாத்திரையிலேயே, பிறர் ஐயம் அகற்றி அன்னாரை உருகச்செய்யும் வடிவினன் பரதன் என்பது புலனாகிறது.

காப்பியத்தில், இம்மனமாற்றத்திற்குப் பின், இலக்குவன் பரதன் மேல், பெரும் மரியாதை கொள்கிறான். மாயா சீதைப் படலத்தில், இராமனையே ஐயுறவைத்து இந்திரசித்தன், பரதன் மேல் படைகொண்டு செல்வது போல், போக்குக் காட்டி மாயம் செய்கிறான். பரதன் மேல் கொண்ட அளவற்ற



அன்பில், அவன் ஆற்றல் மறக்கிறான். அவனுக்கு ஏதும் தீங்கு வந்தறுமோ என்று மனம் சாம்புகின்றான். அப்போது இலக்குவன், பரதனைப் புகழ்ந்து இராமனிடம் பேசுகின்றான்.

'ஐய பரதனை அமரின் ஆர்க்க
எவ்விடற்கு உரியான் போன இந்திர சித்தே
அன்று
தெவ்விடத்து அமையின் மும்மை உலகமும்
தீய்ந்து'

என்று பரதன் பேராற்றலைப் புகழ்கின்றான். பரதனின் போராற்றலை, இவன், எங்கு, எப்போது கண்டான் என்று தெரிந்திலது. ஒருவரைப் பற்றி மனத்தில் உயர் எண்ணத்தை உருவாக்கிக் கொண்டால், அவர், ஆற்றல் பலவும் நிறைந்தவராகவே தோன்றுவர் போலும்! பகை மறந்து, இலக்குவன் பரதனைப் புகழ்வதில், நம் நெஞ்சம் நிறைவு காண கிறது.

இதே போல், பிரமாத்திரப் படலத்தில் இந்திர சித்தன் கணையினால், இலக்குவன் கட்டப்படுகிறான். இத்தனை ஆற்றல் பெற்ற தான், அக்கணைக்குக் கட்டுண்டதை நினைக்கிறான். நினைப்பவன் நெஞ்சில், பரதன் வருகிறான். இவ்வாறான ஒரு வஞ்சத்தில், பரதன் நிலை என்னவாக இருக்கும் என்று சிந்திக்கிறான். உறுதியாகப் பரதனாயின் இக்கணையில் கட்டுண்டிரான் என்று, இலக்குவன் மனம் மதிப்பிட்டுப் பார்க்கிறது.

'தீக்கொண்ட வஞ்சன் வீசத்
திசைமுகன் பாச ந்தீண்ட
வீக்கொண்டு வீழ யானோ
பரதனும்? வெய்ய கூற்றைக்
கூக்கொண்டு குத்துண்டு அன்னான்
குலத்தொடு நிலத்தன் ஆதல்'

இலக்குவன் நெஞ்சப் பாங்கில் அவன் பரதன் மேல் கொண்ட ஐயம் யாவும் நீங்கி, உயர் எண்ணம் பூத்திருத்தலை இனங்கண்டு மகிழ முடிகிறது. எத்தனை ஐயங்களுக்கும் அப்பாற்பட்ட உத்தமன் பரதன் என்பதைக் கவிஞன் நிலைநிறுத்திக் காட்டுகின்றான்.

உடன் பிறந்து பழகிய, அரசர் குலத்து இலக்குவனே பரதனை ஐயுற்றான் என்றால், முன்பின் பரதனை அறியாத குகன் ஐயுற்றதில், வியப்பேதும் இல்லை. பெரும்படையுடன் இராமனை மீட்டு நாட்டிற்கு அழைத்துப் போகப் பரதன் வருகிறான். அவன் படை வரவு கண்டு குகன் தவறுபட நினைந்து சினம் கொள்கிறான்.

'அஞ்சன வண்ணன் என் ஆருயிர்
நாயகன் ஆளாமே
வஞ்சனையால் அரசு எய்திய
மன்னரும் வந்தாரே'

என்று நினைந்து, பரதனைப் படை கொண்டு எதிர்க்கத் துணிகிறான். பரதனைக் குகன், அவன் இராமன் அரசினை, வஞ்சனையால் கவர்ந்து கொண்டதாகவே கருதியிருப்பது தெரிகிறது. தவறான முதல் மதிப்பீடு, மேலும் மேலும் பொருத்தமற்ற வார்த்தைகளுக்கு இடம் கொடுத்து விடுகிறது.

'முன்னவன் என்று நினைந்திலன்
மொய்புலி அன்னான் ஓர்
பின்னவன் நின்றனன் என்றிலன்'

அண்ணன் என்றும் பாராது, ஆற்றல்மிக்க இலக்கு வன் துணை நிற்பதையும் எண்ணாது, இவன் எப் படிப் படை கொண்டு வந்தான் என்று வினவுகின் றான்.

'பவமும் நின்ற பெரும் பழியும்
பகை நண்போடும்
ஏவமும் எனபவை மண உலகு
ஆள்பவர் எண்ணாரோ?'

நிலனாள்பவர்களுக்குப் பழிபாவங்களில் நாட்டம் இராதோ? என்றெல்லாம் குகன் பலபட எண் ணிச் சினந்து நிற்கின்றான்.

சுமந்திரன் சொல்வழி, குகன் அன்புணர்ந்த பரதன், கங்கையின் கரை சார்ந்தான். மறுகரையில் இருந்து அவன் தோற்றம் கண்ட குகன், துணுக்கம் எய்துகின்றான். பரதன் தோற்றத்தைக் கம்பன், குகன்கண் வழி காட்டுகின்றான்.

'வற்கலையின் உடையானை
மாசடைந்த மெய்யானை
நற்கலை இல் மதி என்ன
நகை இழந்த முகத்தானை
கல்கனியக் கனிகின்ற
துயரானை -'

குகன் கண்ணுற்றான். அவன் வில் கை நழுவியது. பரதனும் சத்துருக்கனும், இராம - இலக்குமனர் களாகவே அவன் கண்களுக்குத் தோன்றுகின் றனர். அன்னவன் முகத்துக் காணப்படும் துன்ப மும் இராமன் சென்ற திசை நோக்கிக் கைகுவிக்கும் அன்பும், அவன் அன்பைப் பறைசாற்றுகின்றன. குகன் நெஞ்சில் ஒரு துணிபு பிறக்கிறது.

'எம்பெருமான் பின்பிறந்தார்
இழைப்பரோ பிழைப்பு

இராமனுக்குப் பின்பிறந்தார், தவறு செய்யார் என்ற தெளிவு பிறக்கிறது. குகன், தன் நாவாய் ஏறி, கங்கை கடந்து பரதனைப் பணிகின்றான்.

குகனின் நம்பிக்கை பொய்த்திலது. பரதனை வணங்கித் தழுவிய குகன், 'எழுவினும் உயர்ந்த தோளாய் எய்தியது என்னை?' என, அவன் அங்கு வருகை தந்ததற்கான காரணத்தை வினவுகின்றான். பரதன் பதில், குகன் மதிப்பீட்டில், அவனைப் பன்மடங்கு உயர்த்தியது. 'என் தந்தை முன்னையோர் காத்த முறைமை தவறினான். அத்தவற்றினை நீக்கி, இராமனை மீண்டும் மன்னனாக்க வேண்டி வந்தேன்' என்கிறான் பரதன்.

'முழுதுலகு அளித்த தந்தை
முந்தையோர் முறை யினின்றும்
வழுவினன் அதனை நீக்க
மன்னனைக் கொணர்வான்' என்றான்.

அண்ணனை என்னாது, மன்னனை என்ற பரதன் கூற்றில், தாய் தந்தை எண்ணங்களை, அவன் சிறிதும் ஏற்றிலன் என்பதை உணர முடிகிறது. பரதனின் இந்தச் சொற்கள், குகன் உள்ளத்தில், பரதனை உயர்த்துகின்றன.

'தாய் உரை கொண்டு தாதை
உதவிய தரணி தன்னை
தீவினை என்ன நீத்து
சிந்தனை முகத்தில் தேக்கி
போயினை என்ற போழ்து
புகழினோய் தன்மை கண்டால்
ஆயிரம் இராமர் நின்கேழ்
ஆவரோ தெரியின் அம்மா'

நாம் பலகாலும் கேட்டு மகிழ்ந்த இந்தப் பாடல், பரதனின் பெருமையைக் கட்டியம் கூறி நிற்கிறது. தீவினை என்ன நீத்து' என்ற தொடர் பரதன் 'தள்ளரிய பெருநீதித் தனியாறு புகமண்டும் பள்ளம்' என்ப தற்கு மேலும் ஓர் சான்றாக அமைகிறது. பரதனை நோக்கிக் குகன்,

'மன் புகழ் பெருமை நுங்கள்
மரபினோர் புகழ்கள் எல்லாம்
உன் புகழ் ஆக்கிக் கொண்டாய்'

என மேலும் பாராட்டு மொழிகளைப் பகர்கின்றான்.

இலக்குவன், பரதனை உணராது வெகுண்ட போதும், பரதன், அவை ஒன்றும் அறியாது, இளவல் இலக்குவன் மேல், அளவற்ற அன்பே, பூண்டு நிற்கிறான். குகனை நோக்கிப் பரதன், இராமன் துயின்ற காலை, இலக்குவன் யாது செய்தான் என்று, அவன் தொண்டினை அறிய வினவுகின் றான். குகன்,

'அல்லை ஆண்டு அமைந்த மேனி
அழகனும் அவளும் துஞ்ச
வில்லை ஊன்றிய கையோடும்
வெய்து உயிர்ப்போடும் வீரன்

## சிவபெருமானுக்குரிய அட்டபுட்பங்கள்

1. புன்னை
2. வெள்ளெருக்கு
3. செண்பகம்
4. நந்தியாவர்த்தம்
5. நீலோற்பலம்
6. பாதிரி
7. அலரி
8. செந்தாமரை

கல்லை ஆண்டு உயர்ந்த தோளாய்
கணகள் நீர் சொரிய கங்குல்
எல்லை காண்பு அளவும் நின்றான்
இமைப்பிலன் நயனம் என்றான்'

குகன் சொற் கேட்ட பரதன், தன்னையும், இலக்குவனையும் ஒப்பிட்டுப் பார்த்துத் தன்னை நொந்து கொள்கிறான். நான் இராமனுக்கு, நீங்காத துன்பம் தந்தேன். இலக்குவன் அத்துன்பத்தைத் துடைத்து நின்றான் என வருந்துகின்றான்.

'இராமனுக்கு இளையார் என்று
முன்பு ஒத்த தோற்றத்தோமில்
யான் என்றும் முடிவு இலாத
துன்பத்துக்கு ஏது ஆனேன்
அவன் அது துடைக்க நின்றான்
அன்பத்துக்கு எல்லை உண்டோ
அழகிது என் அடிமை'

பரதனின் உயர் பண்பினை நிலை நாட்டும், அரிய களங்களில் ஒன்றாக இக்கூற்று அமைகிறது.

கங்கையைக் கடக்கும் போது பரதன், குகனுக்குத் தன் தாயார்களை அறிமுகம் செய்யும் இடத்தில், கம்பன், பரதன் என்ற பாத்திரத்தைப் பண்பின் உறைவிடமாக உயர்த்திக் காட்டுகின்றான். அவற்றின் திறம் விரிப்பின் பெருகும். வாழ்க்கை முழுவதையும் போர்க்களத்தில் நின்று, வீரம் காட்டும் ஒரு பாத்திரம் பரதன் அல்லன், நேரம் கிடைக்கும் போதெல்லாம், பழி துடைப்பதிலேயே தன்னை இனங்காட்ட வேண்டிய அவலம் அவனுடையது. அவன், தன்னை ஈன்ற கைகேயியை அறிமுகம் செய்யுமிடத்தில், சற்றே கடும் சொற்களைக் கையாள நேர்கிறது.

'படர் எலாம் படைத்தாளை, பழி, வளர்க்கும்
செவிலியை, தன் பாழ்த்த பாவிக்
குடரிலே நெடுங்காலம் கிடந்தேற்கும்
உயிர்ப் பாரம் குறைந்து தேய
உடர்எலாம் உயிர்இலா எனத்தோன்றும்
உலகத்தே ஒருத்தி அன்றே
இடர் இலா முகத்தாளை அறிந்திலையேல்
இந்நின்றாள் என்னை ஈன்றாள்'

ஆழமாகச் சிந்தித்தால், கைகேயி இழைத்த தீமைக்கு முன், பரதன் சொற்கள் குற்றமுடையனவாகத் தோன்றா. அவள் ஈன்றது என்னை, ஆனால், செவிலியாக வளர்த்து பழியை என்ற மனக்குமுறலைக் கம்பன் பதிவு செய்கிறான்.

இராமனும் - பரதனும் 'சந்தித்துக் கொண்டமையும், பரதன் வேண்டுகோளும், இராமன் மறுப்புரைகளும் தனி ஒரு பண்பாட்டு இலக்கியமாக இராமகாதையில் திகழ்வன. தயரதன் இறந்த துயரத்தை, இராமனுக்கு முதன் முதல் தெரிவிக்கும் சோகமும் பரதனுக்கே வருகிறது. தந்தை மறைவு கேட்டுப் பலபட அவன் புலம்புகின்றான். வசிட்டன் தேறுதல் உரைகள் கூறுகின்றான். இராமன், தந்தைக்கு நீர்க்கடன்கள் ஆற்றித் தங்குமிடம் சேர்கிறான்.

மறுநாள் காலை, விரத வேடம் பூண்டதற்கான காரணத்தை இராமன் பரதனிடம் வினவுகின்றான். பரதன்

'உந்தை தீமையும் உலகு உறாத நோய்
தந்த தீவினைத் தாய்செய் தீமையும்
எந்தை நீங்க - மீண்டு அரசு செய்க'

எனப் பணிந்து, நாடாள நீ மீண்டும் வருக என அழைக்கிறான். பலவாறு உலகியல் கூறி, இராமன் நாடு திரும்ப மறுத்துப் பரதனிடம், தந்தை இட்ட கட்டளைப் படி, நாடு இனி உனக்கே உரியது; சென்று நீயே ஆள்க என்று பணிக்கிறான்.

'வரன்நில் உந்தை சொல் மரபினால் உடைத்
தரணி நின்னது என்று இயைந்த தன்மையால்
உரனின் நீ பிறந்து உரிமை ஆதலால்
அரசு நின்னதே ஆள்க -'

என்ற இராமன் வார்த்தைகளைப் பற்றிக் கொண்ட, அறிஞனான பரதன், 'நாடு எனக்குரியது என்பதை,

ஒரு வாதத்திற்காக ஏற்றுக் கொண்டாலும், தற்போது, நான் எனக்குரிய நாட்டாட்சியை நினக்கு வழங்குகின்றேன்! உடன் நாடு திரும்பி நீ முடி சூடிக் கொண்டு ஆள்க' என்கிறான்.

'முன்னா் வந்து உதித்து உலகம் மூன்றிலும்
நின்னை ஒப்பிலா நீ பிறந்த பார்
என்னது ஆகில் யான் இன்று தந்தனென்
மன்ன போந்து நீ மகுடம் சூடு -'

அரசு கட்டிலுக்காகவும், ஆட்சி அதிகாரங்களுக்காவும் தந்தை மகனைக் கொல்வதும், மகன் தந்தையைக் கொல்வதும், உடன் பிறந்தவர்கள் பகைவனுக்குக் காட்டிக் கொடுப்பதும் உலக வரலாறுகளில் படித்து வெறுத்த நம் மனத்திற்குப் பரதன் - இராமன் பண்பாட்டு உறவு ஆறுதலாக அமைகிறது. இராமாயணம் காலத்தை வென்று வாழ்வதற்கான, காரணக் கூறுகளில் இதுவும் ஒன்று என்று, மனம் இனங்கண்டு மகிழ்கிறது.

பரதனினும் ஒரு படிமேலே போய், நாடாள மறுக்கும் இராமன் திறம் அவன் காப்பிய நாயகன் தகுதிக்குக் கட்டியம் கூறி நிற்கிறது.

'எந்தை ஏவ, ஆண்டு ஏழொடு ஏழ் எனா
வந்த காலம் நான் வனத்துள் வைக நீ
தந்த பாரகம் தன்னை மெய்ம்மையால்
அந்த நாள் எலாம் ஆள் என் ஆணையால்'

நீ எனக்குத் தந்த நாட்டை ஏற்றுக் கொண்டு, நான் மீண்டும் உன்னிடம் வழங்குகின்றேன். என் ஆணையை ஏற்றுத் தந்தை கூறிய பதினான்கு ஆண்டுகள், நீ நாடாள்க எனப் பணிக்கிறான். இராமன் அன்பின் முடிச்சு மேலும் இறுக்கம் கொள்கிறது. 'வேண்டாமை அன்ன விழுச்செல்வம்' என்ற குறள் நெறியும் வாழ்வு பெறுகிறது.

பரதன் ஒருவாறு மனம் தெளிகிறான். இராமன் பாதுகைகளை வேண்டிப் பெறுகிறான். பதினான்கு ஆண்டுகளில் நீ நாடு மீளாவிடில், தீப் புகுந்து மாய்வேன் என ஆணை சாற்றுகிறான். இராமன் திருவடிகளைத் தலைமேல் சுமந்து கொண்டு நாடு திரும்புகிறான். இராமன் பாதுகையை அரியணை ஏற்றி, நந்தியம்பதி என்ற இடத்தில் மரவுரி தரித்த கோலத்தினனாய் இராமன் வரவுக்காகப் பரதன் காத்திருப்பதாகக் கம்பன் கதையை நிறைவு செய்கிறான்.

இராமன், மரவுரி தரித்துக் காடு செல்லப் புறப்படும் முன், கோசலையைச் சென்று கண்டு வணங்கி விடைபெறுகிறான். கோசலை பெரிதும் வருந்தி,

'முறைமை அன்று என்பது ஒன்று உண்டு'
மும்மையின்
நிறை குணத்தவன்: நின்னினும் நல்லனால்
குறைவு இலன்'

என்று ஒரு மதிப்பீட்டு உரை பகர்ந்தாள். அந்த உரை எத்துணை உண்மையானது என்பதைக் கம்பன் பரதனின் பாத்திரப் படைப்பில் ஆங்காங்கே ஒளியூட்டிக் காட்டுகின்றான்.

பெருங்காப்பியங்கள், காப்பியத் தலைவனுக்கு நிகரான இன்னொரு தலைவனை, ஒளியூட்டிக் காட்டா, இராமனே இக்கதையின் தனிப் பெரும் நாயகன். பரதன் பாத்திரம், சில காண்டங்களில் மட்டுமே வரும் ஒரு துணைப் பாத்திரமே என்றாலும், கம்பன் பரதனை, இராமனுக்கு நிகரான - சில இடங்களில், அவனின் மேலான பாத்திரமாகவே படைத்துக் காட்டி மகிழ்கிறான்.


கம்பன், தமிழ் மண்ணிலிருந்து ஒரு கதைக் கருவைத் தேர்ந்து கொள்ளாது, இராமன் கதையைத் தேர்வு செய்ததற்குப் பல காரணங்கள் இருக்கலாம். தமிழ் மண்ணில் நெறி திறம்பிய - தன்னிச்சையான வாழ்வை மேற்கொண்டு ஒழுகிய, காமம் சார்ந்த ஆடவர் வாழ்க்கையை நெறிப்படுத்தி, ஒருவனுக்கு ஒருத்தி என்ற உணர்வைத் தோற்றுவது ஒரு நோக்கம்.

இரண்டாவதாக, நமது வீர இலக்கியங்கள் யாவும், ஒரு மொழி பேசிய தமிழர்கள், மொழி வழி ஒன்றுபடாது, இன வழிப் பிரிந்து நின்று போரிட்டு மடிந்த அவலத்தை ஏந்தி நிற்பன. அதிலும் தாயாதிகளும், பங்காளிகளும், தந்தை மகன்களும் நாட்டாட்சிக்காகப் பகைத்துப் போராடிய அவலம் கம்பனை வெகுவாகப் பாதித்திருக்க வேண்டும்.

இந்த அவலத்திலிருந்து தமிழரசர்களை மீட்டு, அரச வாழ்வில் அன்பினை நிலை நாட்ட பரதன் பாத்திரம் கம்பனுக்குப் புதையலாகத் தென்பட்டது. அதனை ஒளியூட்டும் முகத்தான், கம்பன், தமிழர் அரசவரலாற்றில் ஒரு புதிய அத்தியாயத்திற்கு வழிகாட்டி நிற்கிறான்.

(நிறைவு பெற்றது)

★★★



# சுற்றுலாத் தொழில் பொருட் காட்சியில் நமது அரங்கம்

- எம். சம்பத்குமார், B.E.,
உதவிப் பொறியாளர், இந்துசமய அறநிலைய ஆட்சித் துறை,
சென்னை - 600 034.

சென்னையில் நடை பெற்ற சுற்றுலாத் தொழில் பொருட் காட்சியில் இந்த ஆண்டு நமது அரங்கம் திருச்செந்தூர் அருள்மிகு செந்திலாண்டவர் ஆலய முகப்புடன் மக்களைக் கவர்ந்திழுக்கும் கண்கவர் அரங்கமாகவும், அரங்கில் நுழைந்தவுடன் அருள்மிகு செந்திலாண்டவர் தெய்வத் திருக்காட்சியுடன் உண்மையில் திருச் செந்தில் சென்று செந்திலாண்டவரையே தரிசித்ததைப் போன்ற மன நிறைவை வழங்கும். தெய்வீக அரங்கமாகவும் திகழ்ந்து சிப்புற்றது என்பது குறிப் பிடத்தக்கது.

''வந்த வினையும் வருகின்ற வல்வினையும்
கந்தனென்று கூறக் கலங்குமே - செந்திநகர்
சேவக என்ற திருநீறு அணிவார்க்கு
மேவ வாராதே வினன்''

என்று உள்ளுருகிச் செந்திலாண்டவரை வழிபடும் வகையில் நாளும் அலங்கார பூமாலைகள் அணிவித்தும் ஆராதிக்கப்பட்ட தேங்காய் பழத்தட்டு வைத்தும் உண்மையில் அருள்மிகு செந்திலாண்டவரைத் தரிசிக்கும் மனநிறைவைப் பொருட்காட்சிக்கு வருகை தந்த பல்லாயிரக்கணக்கான மக்கள் பெறும் வகையில் சுற்றுலாப் பொருட்காட்சியில் நமது இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை அரங்கம் அற்புதமாக வடிவமைக்கப்பட்டு இருந்தது குறிப் பிடத்தக்கது. பிரசாத தட்டில் மக்கள் திருநீறு, குங்குமம் எடுக்கும் போது, ஆலய மணியும் கணீர் என மங்கல வாழ்த்து ஒலியாக முழங்கியதைக் கண்டும் கேட்டும் மக்கள் ஆனந்தப் பரவசம் அடைந்ததும் குறிப் பிடத்தக்கது.

அருள்மிகு செந்திலாண்டவர் தரிசனத்துடன் அரங்கிற்குள் நுழைந்த மக்கள் நடராசப்பெருமானின் பஞ்ச சபைகளையும் கண்டு பரவசம் உற்றனர்.

தில்லையில் பொற்சபை, திருவாலங்காட்டில் இரத்தினசபை, மதுரையில் வெள்ளியம்பலம், திருநெல்வேலியில் தாமிரசபை, திருக்குற்றாலத்தில் சித்திரசபை என ஐந்து சபைகளையும், நடராசர் ஆடும் தாண்டவத் திருக்கோலங்களையும் கண்டு மக்கள் பேரின்பப் பரவசமுற்றனர்.

இந்து சமயம் ஆறு உட்பிரிவுகளைக் கொண்டு திகழ்கின்றது. சைவம், வைணவம், சாக்தம், காணாபத்யம், கௌமாரம், சௌரம் எனும் அவ்வாறு பிரிவுகளும் முறையே சிவன், திருமால், பராசக்தி, கணபதி, முருகன், சூரியன் ஆகியோரை முழுமுதற் கடவுளராக வழிபடும் சமயங்கள் ஆகும். இந்த ஆறு உட்பிரிவுகளையும் தெளிவுபடுத்தும் அழகிய காட்சி விளக்கப்படங்களுடன், முருகனின் திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், திருஆவினன்குடி, சுவாமிமலை, திருத்தணிகை, பழமுதிர்ச்சோலை ஆகிய ஆறு படை வீடுகளையும் எடுத்துக் காட்டும் வண்ணப் படங்களும் தொகுத்து எழிலுற அமைக்கப்பட்டிருந்ததைக் கண்டு மக்கள் மகிழ்ச்சியும் மனநிறைவும் பெற்றனர்.

திருமாலின் நவதிருப்பதிகள், காலந்தோறும் கோயில்கள் வளர்ந்த வரலாற்றினைக் காட்டும் பல்வேறு மன்னர் காலத்தைய கோபுரங்கள், திருக்குளங்கள், திருத்தேர்கள் என அணி அணியாக வண்ணப் படங்கள் விளக்கங்களுடன் அமைக்கப்பட்டிருந்தது மக்களைப் பெரிதும் மகிழவைத்ததில் வியப்பிருக்க முடியாது.

எம்மதமும் சம்மதம் என்பதுவே இந்து மதத்தின் இனிய குறிக்கோள். இதனையே ''ஒன்றே குலம் ஒருவனே தேவன்'' எனவும் ''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' எனவும் நம் பண்டைய இலக்கியங்கள் பறைசாற்றி மகிழ்கின்றன. இந்து சமயத்தின் இந்த உலகளாவிய இனிய பண்பை விளக்கும் வகையில் திருக்கோயில்களில் மேற்கொள்ளப்பட்ட சிறப்பு வழிபாடு மற்றும் பொது விருந்து விழாப் படங்களும் நமது அரங்கில் வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

நமது அரங்கில் மக்களைக் கவரும் இன்னொரு சிறப்பு அம்சமாக ஒளி - ஒலி காட்சியும் அமைந்து சிறப்புற்றது. அவ்வொளி - ஒலிக் காட்சியில் சூரசம்ஹாரம், திருப்பாணாழ்வார் வைபவம், திருநாளைப் போவார் வரலாறு ஆகியவை இடம் பெற்று

''எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே
அல்லாமல்
வேறொன் றறியேன் பராபரமே''

என்ற நமது இந்துமதக் கோட்பாட்டினை இனிது விளக்கியது என்று குறிப்பிடுதல் வேண்டும்.

# நூல் மதிப்புரை

- அ. அருள்செல்வி

**நூல்பெயர் :** வள்ளலாரின் அணுகுமுறைகள்
**நூலாசிரியர் :** முனைவர் க. அமிர்தலிங்கம்
**வெளியீடு :** கலைமணி பதிப்பகம்
189, கவிமணி தெரு,
பெரியார் நகர் தெரு,
விருத்தாசலம் - 606 001.
**பக்கங்கள் :** 128 (டெம்மி)
**விலை :** ரூ. 40.00

வள்ளலாரைப் பற்றிய ஆய்வு நூல்களில் இந் நூல் ஒரு தலை சிறந்த நூல் என்பதில் ஐயமில்லை.

சென்னைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் தமிழ் இலக்கியத் துறையின் தலைவர் டாக்டர் பொற்கோ அவர்கள் இந்நூலிற்கு வரைந்துள்ள சிறப்புரையில்

''ஆன்மநேய வள்ளலார் மக்களை மேம் படுத்த எத்தகைய அணுகுமுறைகளை மேற்கொண் டார் என்று ஆசிரியர் மிகுந்த ஈடுபாட்டோடும், கவனத்தோடும் ஆராய்ந்திருக்கிறார். புதிய கோணங் களில் வள்ளலாரை உணர்ந்து போற்ற வழிவகை செய்துள்ள முனைவர் அமிர்தலிங்கம் அவர்களின் பணி பாராட்டிற்குரியது'' என்று குறிப்பிட்டுள்ளார்.

இது மிகச்சிறந்த ஆய்வு நூலாக மட்டும் இல் லாமல், எல்லோரும் படித்துப் பயன் கொள்ளத் தக்க கற்கண்டு நடையில் எழுதப்பட்ட நூலாகவும் இருப்பது குறிப்பிடத்தக்கது. மெய்யன்பர்கள் இந் நூலை வாங்கிப் பயன்பெற வேண்டுகின்றோம்.

★★★

**நூல் பெயர் :** வள்ளலாரின் இலக்கிய உத்திகள்
**நூலாசிரியர் :** டாக்டர் அர. ஜெயச்சந்திரன்
**வெளியீடு :** அருள் நெறி பதிப்பகம்
148, லக்கி காம்ப்ளக்ஸ்,
கல்லூரி சாலை,
விருத்தாசலம் - 606 001.
**பக்கங்கள் :** 175 (டெம்மி)
**விலை :** ரூ. 50.00

விழிகளின் ஒளி இழந்தாலும், அறிவின் கூர்மை மிக்கவரான இந்நூலாசிரியர், கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் டாக்டர் அர. ஜெயச்சந்திரன் அவர்கள் ''வள்ளலாரின் இலக்கிய உத்திகள்'' என்ற தலைப்பில் ஆய்வு செய்து முனைவர் பட்டம் பெற்றிருப்பதோடு ''யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்'' எனும் உயரிய நோக்கில் இவ்வாய்வு நூலைத் தமிழ் கூறு நல்லுலகம் பயன் கொள்ள நூலாகவும் படைத்து வெளியிட்டிருப் பது போற்றுதலுக்குரியது.

இந்நூலுக்கு அணிந்துரை வழங்கிச் சிறப் பித்துள்ள சன்மார்க்க தேசிகர் தவத்திரு ஊரன் அடிகள் அவர்கள்

''நூல் - உத்திகளையே அன்றி அனுபவ உத்திகளையும் ஆராய்தல் இந்நூலின் தனிச் சிறப்பு ..... வள்ளலாரின் முழுவடிவத்தை (முழுப் பரிமாணத்தை) நன்கறிய இந்நூல் உதவும்''

என்று பாராட்டியிருப்பது குறிப்பிடத்தக்கது.

ஆன்மீக ஒளி மிகுந்த பேராசிரியரின் இப் பயன் மிகு ஆய்வு நூலை மெய்யன்பர்கள் அனை வரும் வாங்கி ஆதரிக்க வேண்டுகின்றோம்.

★★★

**நூல் பெயர் :** ஜோதி தரிசனம்
**நூலாசிரியர் :** தென்னம்பட்டு ஏகாம்பரம்
**வெளியீடு :** கங்கை புத்தகநிலையம்
13, தீதையாலு தெரு,
தியாகராய நகர், சென்னை - 17.
**பக்கங்கள் :** 144 (கிரௌன்)
**விலை :** ரூ. 27.00

இந்நூலும் ''மரணமிலாப் பெருவாழ்வு'' வாழ வழிகாட்டிய அருட்ஜோதி வள்ளலார் பற்றிய ஆய்வுநூலே.

முதுபெரும்தமிழ்ப் பேராசிரியர் கலை மாமணி அ.ச. ஞானசம்பந்தம் அவர்கள் தாம் வழங்கிச் சிறப்பித்துள்ள அணிந்துரையில்

''ஆன்மீகம் பற்றிய 12 கட்டுரைகள் கொண்ட ஒரு நூலை வெளியிடுவதற்கு நெஞ்சுரம் வேண்டும். அதனை மிகுதியாகப் பெற்றுள்ள ஏகாம்பரனாரின் இந்நூல் தமிழர்கட்குப் பெரிதும் பயன்படும்''

என்று பாராட்டியுள்ளார்.

மெய்யன்பர்கள்

''மரணமிலாப் பெருவாழ்வில்
வாழ்ந்திடலாம் கண்டீர்''

என்று உறுதிபட உரைத்து உயர்நெறி காட் டிய அருட் பெருஞ்சோதி, தனிப்பெருங்கருணை வள்ளலாரைப் பற்றிய இவ்வாழ்வியல் நூலை வாங்கி ஆதரிக்க வேண்டுகின்றோம்.

# வினாவும் விடையும் - திருவிளக்கு வழிபாடு

- டாக்டர் ஹேமா சந்தானராமன்

திருமயிலை வாணியர் திருமண மண்டபத்தில் இருநூறு மகளிர் பங்கேற்ற திருவிளக்கு வழிபாடு அண்மையில் நடைபெற்றது. தமிழ் அர்ச்சனை செய்து அதனை நடத்தித்தந்த பேராசிரியர் முனைவர் திருமதி ஹேமா சந்தானராமன் அவர்களிடம் திருமதி ஷகீலா சிவகுமார் அவர்கள் கேட்ட வினாக்களும் அவற்றுக்கு உரிய விடைகளும் இப்பகுதியில் இடம் பெற்றுள்ளன.



**வினா : திருவிளக்கு வழிபாட்டின் தத்துவம் என்ன?**

**விடை :** இறைவன் ஒளி வடிவானவன். அவனை, திருவிளக்கின் வடிவில் கண்டு வழிபடுகிறோம்.

**வினா : சமய நூல்களில் இதற்குச் சான்றுகள் உண்டா?**

**விடை :** பல சான்றுகள் காட்டலாம். ''இருளிலிருந்து வெளிச்சத்துக்கு வாருங்கள்'' (தமஸோமா ஜோதிர் கமய) என்று உபநிடதம் அழைக்கின்றது.

ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெரும் ஜோதி, பரஞ்ஜோதி, ஒளி வளர் விளக்கு என்றெல்லாம் இறைவனை ஒளிமயமாகக் காட்டுகின்றனர். ''யார் நம் அறிவைத் தூண்டுகிறாரோ அந்தச் சுடர்க் கடவுளின் மேலான ஒளியைத் தியானிப்போம்'' என்பதுதான் காயத்ரி மந்திரத்தின் பொதுவான பொருள்.

**வினா : இது குறித்து நடைமுறை எடுத்துக்காட்டுகள் ஏதேனும் உள்ளதா?**

**விடை :** ஒளிமயமான வாழ்க்கை என்றும், ஒளிமயமான எதிர்காலம் என்றும் கூறுகிறோம். சமுதாயத்துக்கு நல்ல வழி காட்டியவர்களை 'ஒளி விளக்கு' என்று போற்றுகிறோம்.

ஏன், ஒளியின் கூறுகளே இன்று தொலைக்காட்சி மற்றும் இண்டர்நெட் ஆகியவற்றில் ஆதிக்கம் செலுத்துகின்றன.

ஒளி அச்சு (லேசர் பிரிண்டிங்) அச்சகத் துறையில் பெரும் புரட்சியையும் வளர்ச்சியையும் அளித்துள்ளது. கடவுளின் கரங்களிலிருந்து வரும் ஒளிக்கதிர் பல அற்புதங்களை நிகழ்த்துவதாக நம் முன்னோர் சித்தரித்தனர்.

இன்று, அவ்வாறே, லேசர் ஒளி அற்புதமான மருத்துவர் பணிகளை விநாடிகளில் செய்து முடிக்கிறது.

**வினா : திருவிளக்கு வழிபாட்டை ஏன் மகளிர் மட்டுமே விரும்பி நடத்துகின்றனர்?**

**விடை :** நாம் (பெண்கள்) தானே வீட்டில் விளக்கேற்றுகிறோம்! ''வீட்டிற்கு மருமகள் வரவேண்டும்'' என்று கூறுவதை விட ''விளக்கேற்ற ஒரு பெண் வேண்டும்'' என்றுதானே அனைவரும் எதிர்பார்த்து உழைக்கின்றனர்.

**வினா : தீபலட்சுமி என்ற திருமகள் வடிவாகவும் திருவிளக்கைப் புகழ்கின்றனர். அது குறித்த தங்கள் கருத்து என்ன?**

**விடை :** நன்றாகக் கேட்டீர்கள். செல்வச் செழிப்பும், வளமான வாழ்க்கையும் அமைய திருமகளின் அருள் வேண்டும். செழிப்பின் சின்னம் விளக்கு. அது உள்ள இடத்தில் இருள் இல்லை. அது போல் அறிவும் இறையருளும் உள்ள இடத்தில் அறியாமையும்,

வறுமையும் இல்லை. இதனைக் கருத்தில் கொண்டே திருவிளக்கைத் 'தீபலட்சுமி' என்று பேற்றுகின்றனர்.

மேலும், இருள் சோம்பலையும் செயலற்ற தன்மையையும குறிக்கும். ஒளி சுறுசுறுப்பையும், செயலாற்றலையும் குறிக்கும். அதனால் திருவிளக்கை, சக்தியின் அம்சமாகக் கருதி வழிபடுகிறோம்.

**வினா : திருவிளக்கு வழிபாட்டுக்கு எந்த மந்திரங் களைக் கூறுகின்றனர்?**

**விடை :** தீப லட்சுமியாகக் கருதி வழிபடுவோர் 'லட்சுமி அஷ்டோத்திரம்' என்னும் திருமகள் நூற் றெட்டுப் போற்றியைக் கூறி அர்ச்சனை செய்கின் றனர். ஆயிரத்தெட்டுப் போற்றி கூறி அர்ச்சிக்க விரும்புவோர் பெரும்பாலும் வடமொழி லலிதா சகஸ்ர நாமத்தையே கூறி வழிபடுகின்றனர்.

**வினா : தாங்கள் கடந்த கால் நூற்றாண்டு காலமாக தமிழ்வழி அர்ச்சனையுடன் திருவிளக்கு வழிபாடு நடத்தி வைப்பதை நான் அறிவேன். தாங்கள் எந்த நூலைக் கொண்டு நடத்துகிறீர்கள்?**

**விடை :** அமரர் ஹா.கி. வாலம் அம்மையார் அவர் கள் 'வடிவழகி திருவாயிரம்' என்ற பெயரில் லலிதா சகஸ்ர நாமத்தைத் தமிழில் இயற்றியுள்ளார்கள். கடந்த 1990-ஆம் ஆண்டு வரை அதனைக் கொண்டு தமிழ் அர்ச்சனை நடத்தி வைத்தேன். அதே ஆண்டில், என் கணவர் முனைவர் பருத்தியூர் சந்தானராமன் அவர்கள் 'அன்னையின் பெயர்கள் ஆயிரம்' என்ற பெயரில் லலிதா சகஸ்ர நாமத்தைத் தமிழில் மொழிபெயர்த்தார்கள். அது முதல் அதுவே எனது தமிழ் அர்ச்சனைக்கு உரிய நூலாயிற்று. அதன் பிரதி கள் மற்ற பெண்களும் கையில் வைத்திருப்பதால் என்னுடன் இணைந்து போற்றிகளின் பொருளை உணர்ந்து உருக்கமாகக் கூறி வழிபடுகின்றனர்.

**வினா : இந்தத் தமிழ் அர்ச்னைக்கு நல்ல வரவேற்பு உள்ளதா?**

**விடை :** வியக்கத்தக்க வரவேற்பு உள்ளது! இந்த மண்டபத்தில் நீங்களே பார்த்திருக்கலாம். கீழ்த்தளத் தில் ஒரு குழுவினர், மேல் தளத்தில் ஒரு குழுவினர் என இரு குழுக்களாகப் பிரிந்து மகளிர் போட்டி போட்டுக்கொண்டு பங்கேற்கின்றனர். பலர் இடம் கிடைக் கா மல் ஏமாற்றத்துடன் செல்கின்றனர்.

ஆதலால் அடுத்து வரும் ஆண்டுகளில் இரண்டு வெள்ளிகளில் நடத்த நிர்வாகிகள் ஆலோசித்து வருகின்றனர்.

**வினா : வேறு எங்காவது இதுபோல் நடத்தி வைக்கிறீர்களா?**

**விடை :** இம் மன்றத்தினரே ஆடி வெள்ளிக் கிழமை யில் திருவல்லிக்கேணி, ஜாபர்கான் பேட்டை யில் நடத்துகின்றனர். வேறு எங்கு அழைத்தா லும் சென்று நடத்திக் கொடுக்கிறேன்.

செய்தித்தாள்கள், தொலைக்காட்சி போன்ற ஊடகங்கள், (Mass Medias) இவ்விளக்கு பூஜையை' வெளிச்சத்துக்குக் கொண்டுவந்தால் மேலும் பலர் பயனடைவர்.

**வினா : இவ்வழிபாடு குறித்து வேறு முக்கிய செய்திகள் ஏதேனும் இருக்கிறதா?**

**விடை :** பெரும்பாலும், ஏழை எளிய நடுத்தர உழைக்கும் வர்க்கத்தினர் ஆகிய பெண்களே இதில் பங்கேற்கின்றனர். தங்கள் வாழ்வு உயர, இன்னல்கள் நீங்கிட வேண்டி வழிபடுகின்றனர். தமிழ் அர்ச்சனை செய்வதால் சில இடங்களில் அவர்கள் உள்ளம் நெகிழ்ந்து கண்ணீர் மல்குவதைக் காண முடிகிறது.

பீஷ்மர் ஒரு முறை தருமனிடமும் துரியோ தனனிடமும் தனித்தனியே பணத்தைக் கொடுத்து ''வீடு நிறைந்த பொருள் வாங்கி வையுங்கள்'' என்று கூறினார்.

துரியோதனன் வைக்கோலை வாங்கித் தன் மாளிகையில் அடைத்தான். ''காசு போதவில்லை மேலும் சிறிது கொடுங்கள்'' என்று கேட்டான்.

தருமனோ ஒரு சிறு விளக்கை வாங்கி, வீட்டின் நடுவில் ஏற்றிவைத்தான்! அத்துடன் எஞ்சிய பணத்தையும் பிதாமகரிடம் திருப்பிக் கொடுத்தான்.


''இது தான் வீடு நிறைந்த பொருள்'' என்று பாராட்டினார் பீஷ்மர்.


அதுபோல் வீடு நிறைந்திட நாடு செழித்திட திருவிளக்கைப் போற்றுவோம். ஏற்றுவோம்.

★★★


**திருக்கோயில் இதழ் வாங்கிடுவீர்**

உன்னத ஆன்மீக ஞானம் பெற ஒவ்வொரு மாதமும்
திருக்கோயில் இதழ் படித்திடுவீர்! இன்றே உறுப்பினர் கட்டணம் அனுப்பிடுவீர்.





சென்னை அருள்மிகு ஏகாம்பரேசுவரர் திருக்கோயிலில் மாண்புமிகு தமிழ் வளர்ச்சி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்கள் கிரானைட் தளவரிசைப் பணியின் நிறைவு விழாவில் கலந்துகொண்டு திருமுறைக் கல்வெட்டுக்களைத் திறந்துவைத்து சிறப்பித்தார்கள். சென்னை இணை ஆணையர் திரு கோ. பக்கிரிசாமி, பி.எஸ்.சி, பிஎல்., உதவி ஆணையர் திரு அ. சுப்பிரமணியம், எம்.ஏ., பி.எல். ஆகியோர் முன்னிலையில் இவ்விழா சிறப்புற நடைபெற்றது. ஆலய செயல் அலுவலர் திரு அ. தனபாலன் பி.ஏ., அறங்காவலர் குழுத்தலைவர் திரு கொ.சி. நடராசன் மற்றும் அறங்காவலர்கள் விழா ஏற்பாடுகளைச் சிறப்புறச் செய்திருந்தார்கள்.






திருப்பரங்குன்றம் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி ஆலயம் நடத்தி வரும் பெண்கள் மேல்நிலைப் பள்ளி கூடுதல் வகுப்பறை கட்டிடத் திறப்பு விழாவிலும் புதிய விடுதி அடிக்கல் நாட்டு விழாவிலும் மாண்புமிகு தமிழ் வளர்ச்சி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்கள் கலந்துகொண்டு குத்து விளக்கு ஏற்றி வைத்தார்கள். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள், அறங்காவலர் பெருமக்கள், ஆலய நிர்வாக அதிகாரி - உதவி ஆணையாளர் ஆகியோர் உடன் உள்ளார்கள்.

வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை - 600 034.
ஆசிரியர் : கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், எம்.ஏ.பி.எச்.டி.,
அச்சிட்டோர் : **பாவை பிரிண்டர்ஸ் (பி) லிட்.**, 142, ஜானி ஜான் கான் தெரு, சென்னை - 600 014.